# என் தாசனாகிய

# யோபு!



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# என் தாசனாகிய

# யோபு !

(யோபுடைய சரித்திர ஆகம விளக்கம்)

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. Dr. **அ.கிறிஸ்டோபர்**, M.A., D.D.,

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேரு வீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9. தென் இந்தியா

FIRST EDITION - JAN 1991
RE EDITION - April 2008
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T - 3

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SURAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்

மறைதிரு. **யோபு ஞானப்பிரகாசம்**

இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்

கோயம்புத்தூர் – 12.

'என் தாசனாகிய யோபு' என்ற அரிய நூலுக்கு அணிந்துரை வழங்க ஆண்டவர் அருளிய அரிய வாய்ப்புக்காய் அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

பாஸ்டர். கிறிஸ்டோபர் எழுதியுள்ள இந்த நூலுக்கு அணிந்துரை எழுதுவதற்கு முன்பு மிகவும் கருத்தாக வாசித்து இவருடைய தேவ ஞானத்தைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டேன். இக்காலத்தில் பொதுவாக இந்தியாவிலும் இதர நாடுகளிலும் யோபுவின் புத்தகத்திற்கு இவ்வளவு அழகாக விளக்கவுரை எவரும் எழுதி உள்ளதாகத் தோன்றவில்லை. இனிய தமிழில் எளிய நடையில் எவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் உரைநடையில் தனக்கே உரித்தான முறையில் எழுதி உள்ளார்.

யோபு, மனைவி, மக்கள், சாத்தான், சோதனை ஆயுதங்கள், நண்பர்கள் ஆகியோரைப் பற்றி இவர் கொடுத்துள்ள விளக்கங்களையும் விமர்சனங்களையும் படித்த பொழுது, இவர் ஒரு சிறந்த வேத அறிவும் ஆராய்ச்சியுமுள்ள வேத பண்டிதர் என்று விளங்குகிறது.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய நானே இதை முதலாவது வாசித்து அதிக பயன் அடைந்து உள்ளபடியால் ஒவ்வொரு ஊழியரும் விசுவாசியும் இஃதினை வாங்கி வாசித்து பக்திவிருத்தி அடையும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## ஆக்கியோன் உரை

கர்த்தருக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு அன்பு வாழ்த்துக்கள். என் தாசனாகிய யோபு என்ற புத்தகத்தின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். யோபு என்ற பெயரை உச்சரிக்காத உதடுகளே கிறிஸ்தவ உலகத்தில் இருக்க முடியாது. ஆவிக்குரிய வாழ்வில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஆழமான சத்தியத்தை, ஆறுதலின் வார்த்தையை, ஆசீர்வாத உபதேசத்தை, அளவில்லாமல் அள்ளித்தரும் ஆவிக்குரிய பெட்டகம் இந்தப் புத்தகம். என்னுடைய சபை மக்களுக்கு கடந்த நாட்களில் கர்த்தர் கற்றுத்தந்த வேதபாடங்களையே ஈண்டு புத்தகமாக தொகுத்து இருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை எழுத துணை புரிந்த என் அன்பு ஆண்டவருக்கும், எப்பொழுதும் என்னை ஜெபத்தில் தாங்கி வரும் என் சபை மக்களுக்கும் அணிந்துரை வழங்கிய திருமறைப் பெரியார் அவர்களுக்கும், அழகாய் அச்சடிக்க உதவிய அனைவருக்கும், அதற்காய் பொருள் உதவி செய்த அன்பர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மகிமையின் தேவன் கிருபையாய் உங்களை நடத்துவாராக.

இவண்,

பாஸ்டர். **A. கிறிஸ்டோபர்,**

I.P.A. ஜெப வீடு, ஈரோடு.

## படைக்கிறேன்

| | |
|---|---|
| அதிசயமானவரே! .......................... | ஏசாயா 9 : 6 |
| ஆலோசனைக் கர்த்தரே! ...................... | ஏசாயா 9 : 6 |
| இம்மானுவேலே! .................................. | ஏசாயா 7 : 14 |
| ஈசாயின் கிளையே! ............................... | ஏசாயா 11 : 1 |
| உடன்படிக்கையே! ............................. | ஏசாயா 42 : 7 |
| ஊற்றுண்ட பரிமளமே! ........................ | உன் 1 : 2 |
| எபெனேசரே! ................................. | I சாமு 7 : 12 |
| ஏகசக்கராதிபதியே! ............................. | I தீமோ 6 : 15 |
| ஐசுவரிய சம்பன்னரே! ......................... | ரோமர் 10 : 12 |
| ஒளியானவரே! ................................ | யோவான் 1 : 9 |
| ஓமெகாவே! .................................. | வெளி 21 : 6 |
| ஔஷதமே! (பரிகாரியே) ...................... | யாத் 15 : 26 |

இஃதினை நின்பாதம் படைக்கிறேன்.

இவண்
**ஆக்கியோன்**

## பொருளடக்கம்


1. யோபுவின் புத்தகம்!
2. உத்தமனாகிய யோபு!
3. சாத்தான்!
4. யோபுவின் பிள்ளைகள்!
5. சோதனை ஆயுதங்கள்!
6. நண்பர்களும் - யோபுவின் பின்னிலைமையும்!

## 1

# யோபுவின் புத்தகம் !

பரிசுத்த வேதாகமத்தில் பரவிக்கிடக்கும் பக்தர்களின் வாழ்க்கையில் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருப்பவர் பக்தனாகிய யோபு.

பழைய ஏற்பாடானாலும் சரி, புதிய ஏற்பாடானாலும் சரி யோபுவின் புத்தகத்தை மிகவும் கவனித்து ஆராய்ந்து உபதேசத்திற்கு ஆதாரமாக வேத பண்டிதர்கள் வைத்து இருக்கிறார்கள்.

வேதாகமத்தில் 18வது புத்தகமாய் 42 அதிகாரங்கள் கொண்டு 1070 வசனங்களையுடைய இப்புத்தகம், திருச்சபைக்கு தேவ ஆவியானவரால் அருளப்பட்டது என்பது மிகவும் நிச்சயம்.

இந்த யோபுவின் புத்தகத்தில் அதிகமான விஞ்ஞான பொக்கிஷங்கள் புதைந்து கிடக்கிறது. திருச்சபைக்குத் தேவையான அடிப்படை சத்தியங்களை குறித்த உபதேசங்கள் அனைத்தும், இந்த யோபுவின் புத்தகத்தில் நிறைந்திருக்கிறது என்பதை அநேக வேத பண்டிதர்கள் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அறிவியல், இயல்பியல், புவியியல், வானவியல் ஆகிய நவீன விஞ்ஞான இயல்களுக்கு முன்னோடியாக இந்த யோபுவின் புத்தகம் இருக்கிறது என்றும் 77க்கு மேற்பட்ட அறிவியல் கூற்றுகள் இப்புத்தகத்தில் இருப்பதாகவும் திருமறை அறிவியலார் எடுத்துரைக்கின்றனர்.

நாம் இப்பொழுது இந்தப் புத்தகத்தின் மூலம் யோபுவின் சரித்திர ஆகமத்தைக் குறித்த ஒரு சிறிய ஆராய்ச்சி, மற்றும்



தியானத்தை மேற்கொள்ளப் போகிறோம்.

ஒரு புத்தகத்தின் அகக்குறிப்புகளை ஆராய்ச்சி செய்வதற்கு முன்பாக அப்புத்தகத்தைக் குறித்த மேற்போக்கான காரியங்களை ஆராய்ச்சி செய்வது அவசியம். புத்தகத்தின் காலம், புத்தகத்தின் கோட்பாடு, அதன் ஆசிரியர் அதன் பிரிவுகள், அதன் மூலம் சபைக்கு கொடுக்கப்படும் செய்திகள் ஆகியவற்றைக் குறித்து அறிதலும், அலசி ஆய்வதும் அவசியமாகும்.

**1. புத்தகத்தின் காலம் :**

யோபுவின் புத்தகத்தைக் குறித்து பல்வேறு விதமான காலக்கருத்துக்கள் வேதபண்டிதர்களால் வெளியிடப் பட்டிருக்கிறது. மிகத் துல்லியமான காலக்கட்டத்தை கணக்கிட்டு கூற முடியாவிட்டாலும் யோபுவின் புத்தகத்திற்கு வெளியே, ஆனால் திருமறைக்குள்ளே சரியான ஆராய்ச்சி நாம் செய்வோமாகில் தோராயமான காலக்கட்டத்தை கண்டுகொள்ள முடியும்.

கொஞ்சம் கொஞ்சமாக யோபுவின் காலத்தை நெருங்க சில குறிப்புகளைத் தருகிறேன் பின்தொடர்ந்து வாருங்கள். a. இயேசு மற்றும் அப்போஸ்தலர் காலத்திற்கு யோபு முந்தினவர் என்பதில் எந்தவிதமான சந்தேகமில்லை. b. எசேக் 14 : 14-ல் யோபுவின் வரலாறு குறிப்பிட்டிருப்பதால் அவர் எசேக்கியேலுக்கு முந்தினவர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

c. எகிப்திலிருந்து இஸ்ரவேலர் புறப்பட்ட பிறகு அவர்களுக்கு ஆசரிப்புக் கூடாரமும் நியாயப் பிரமாணமும், பலி செலுத்த ஆசாரியர்களும் இருந்தனர். ஆனால் யோபுவின் புத்தகத்தில் யோபு தானே பலி செலுத்தினாரென்று காண்கிறோம். மற்றும் நியாயப் பிரமாணம் ஆசரிப்புக் கூடாரம் போன்ற எந்தக் குறிப்புக்கள் இல்லாததினால் இவர் நியாயப்பிரமாண காலத்திற்கு

முற்பட்டவர் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

d. நியாயப்பிரமாணத்திற்கு முந்தின காலத்தை மனச்சாட்சியின் காலம் என்று வேத பண்டிதர்கள் குறிக்கின்றனர். இந்த மனச்சாட்சியின் காலத்தில்தான் குடும்பத் தலைவர்கள் தங்கள் குடும்பத்திற்காக பலி செலுத்தி வந்தார்கள். உதாரணமாக ஆபிரகாம் (ஆதி 12 : 8) தன் குடும்பத்திற்காக பலி செலுத்தினான் என்று வாசிக்கிறோம்; நோவா (ஆதி 8 : 20) தன் குடும்பத்திற்காக பலி செலுத்தினான் என்று பார்க்கிறோம்; யாக்கோபு (ஆதி 33 : 20) தன் குடும்பத்திற்கு பலி செலுத்தினான் என்று பார்க்கிறோம்.

மேற்கூறிய உதாரணங்களைப் போல் யோபு 1 : 5-ல் தன் குடும்பத்திற்காக யோபே பலி செலுத்தியதினால் நியாயப் பிரமாண காலத்திற்கு முற்பட்ட அதாவது, மனச்சாட்சியின் காலத்திற்கு உட்பட்ட பரிசுத்தவான் என்பது மிகத் தெளிவாகிறது.

e. சர்வ வல்லவர் (Shaddai) என்ற வார்த்தை இப்புத்தகத்தில் 31 முறை வருகிறது. மோசேயின் முட்செடி தரிசனத்திற்கு அப்பால் தேவன் யாவே (யெகோவா) என்று அறியப்பட்டார். மோசேக்கு முன்பிருந்த முற்பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு போன்றோர் காலத்தில் சர்வவல்லவர் என்று அழைத்தது போல யோபுவும் அழைத்திருப்பதினால் இஸ்ரவேலரின் கானான் யாத்திரைக்கு முந்தினவர் என்பதை யூகிக்க முடிகிறது.

f. யோபு முதல் அதிகாரம் 3 ஆம் வசனத்தில் யோபுவினுடைய ஆஸ்திகள் மிருக ஜீவன்களை மையமாகக் கொண்டு கணக்கிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மிருக ஜீவன்களை வைத்து ஒருவருடைய ஆஸ்தியைக் கணக்கிடும் முறை ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு போன்றவர்களின் காலத்தில் இருந்தபடியினால் யோபுவும் அந்தச் சமகாலத்திற்கு உரியவர் என்பதை மேலும் யூகிக்கலாம்.



g. யோபுவின் புத்தகம் 22-ஆம் அதிகாரம் 16-ம் வசனம் “காலம் வருமுன்னே அவர்கள் வாடிப்போனார்கள்; அவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் வெள்ளம் புரண்டது” என்று எழுதப்பட்டுள்ள இந்த வசனம் நோவாவின் காலத்தின் ஜலப்பிரளயத்தைக் குறிக்கிறது என்று பல வேத பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

h. ஆதி 46 : 13 இல் இசக்காரின் மூன்றாவது குமாரன் யோபு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இஃது இந்த யோபுவைத்தான் குறிக்கிறது என்று கிறிஸ்தவ உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற தலைசிறந்த வேதபண்டிதராகிய டேக் (DAKE) கூறுகிறார். இவர் இப்படி கூறுவதற்கு அழுத்தமான காரணங்களும் உண்டு. யோபின் நண்பர்களுடைய பெயர்கள் ஆதி 16 : 13-ல் சொல்லப்பட்ட யோபு ஆகியவர்களின் வாழ்க்கை நாள் சமகாலத்திற்குரியவைகளாக திருமறையில் எழுதப்பட்டிருக்கிறது.

முடிவாக யோபுவின் காலத்தைக் குறித்து பல கருத்து வித்தியாசங்கள் இருந்தாலும் நியாயப் பிரமாண காலத்திற்கு முந்தினவர் அதாவது மோசேக்கு முற்பட்டவர் என்றும் மனச்சாட்சி காலத்தின் பிற்பகுதியை சார்ந்தவர் என்றும் இன்னும் கூடுதலாக சொல்ல வேண்டுமெனில் யோபுவினுடைய பிந்தின நாட்களும் மோசேயினுடைய முந்தின நாட்களும் (மீதியான் தேசத்தில் இருந்த காலம்) ஒன்றாக இருந்திருக்கும் என்பதும் நம்பத்தகுந்த ஆதாரங்களாகும்.

### 2. யோபு சரித்திர புருஷனா?

யோபு சரித்திர புருஷனா அல்லது கற்பனை பாத்திரமா என்று திட்டமாய் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அநேகர் யோபுவின் புத்தகம் புனைவுக் கதை என்று சொல்லி வருகின்றனர். ஆனால் தேவ ஆவியானவரால் எழுதப்பட்ட எந்த ஒரு வார்த்தையும் புனைவுக் கதைகளாக இருக்க முடியாது.

தேவன் புனைவுக் கதைகளின் தலைவன் அல்ல. அவர் சரித்திர நாயகன்; சரித்திரத்தை ஆள்கிறவரே நமதாண்டவர்.

ஈண்டு யோபு சரித்திர புருஷனா என்பதை அறிய திருமறைக்குள்ளேயே சில ஆதாரங்களைக் காணலாம், வாரீர். பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் புத்தகத்தில் 14-ஆம் அதிகாரம் 14-ஆம் வசனத்தில் "யோபு தானியேல் நோவா என்னும் மூன்று புருஷர்கள்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

நோவா உண்மைப் புருஷனானால், தானியேல் ஒரு உண்மைப் புருஷனானால், அவர்களோடு சேர்ந்து கூறப்பட்டிருக்கிற யோபுவும் உண்மைப் புருஷன் தான் என்பதை மாற்றவோ மறுக்கவோ முடியாது.

புதிய ஏற்பாட்டில் யாக்கோபு 5-ஆம் அதிகாரம் 11-ஆம் வசனத்தில் "யோபுவின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களே" என்று வாசிக்கிறோம். கற்பனைப் பாத்திரத்தின் பொறுமையை நிஜவாழ்வுக்கு எடுத்துக்காட்டாக எவராலுமே சொல்ல முடியாது. ஆவியானவர் இல்லாததை இருக்கிறதைப்போல சொல்கிறதற்கு அவர் பொய்யுரைக்கிற தேவன் அல்ல.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் யோபுவின் பெயர் சொல்லப்பட்டிருப்பதினாலும் மேற்கூறிய இந்த இரண்டு சாட்சிகளினாலே உறுதி செய்யப்பட்டிருப்பதினாலும் யோபு ஒரு சரித்திர புருஷன் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

### 3. இப்புத்தகத்தின் ஆசிரியர் யார்?

திருமறையிலுள்ள 66 ஆகமங்களில் முதலாவது எழுதப்பட்ட புத்தகம் யோபுவின் புத்தகந்தான் என்பதை எல்லா வேத ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர். ஆகிலும் இப்புத்தகத்தினுடைய ஆசிரியர் யார் என்பதில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கிறது. சிலர் சாலொமோன், எஸ்றா



போன்றோர் என்றும், சிலர் யோபு, எலிகூ ஆகியோர் என்றும், சிலர் மோசே என்றும் கருதுகின்றனர். ஆகிலும் பெரும்பான்மையான திருமறை வரலாற்று ஆசிரியர்கள் இதை மோசேதான் எழுதினார் என்று எவ்வித சந்தேகமுமில்லாமல் ஒப்புக் கொள்கின்றனர். 5 ஆகமங்கள் (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை) மோசேயினால் எழுதப்பட்டதென்ற பாரம்பரியக் கருத்து யூதர்களுக்குள்ளே நிலவுகிறது போல, யோபுவின் புத்தகத்தையும் மோசேதான் எழுதினார் என்கிற பாரம்பரியக் கருத்தும் நிலவி வருகிறது.

இப்புத்தகத்தின் ஆசிரியர் மோசே என்பதை விசுவாசத்தோடு நாம் ஒப்புக்கொண்டாலும் இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு மூல ஆதாரம் மோசேக்கு எப்படி வந்தது என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம்.

தெளிவான சாட்சியங்கள், தேவனோடு பேசின வார்த்தைகள், நண்பர்களின் சூடு பறக்கும் சுவையான வாதங்கள் போன்றவற்றை மிகத் தெளிவாக, பகுதி பகுதியாக எழுதப்பட்டு இருப்பதால் இந்த சாட்சிகளை கண்ணாரக் கண்டவரும், காதாரக் கேட்டவருமாகிய ஒருவரே எழுதியிருக்க வேண்டும்.

நம்முடைய ஆராய்ச்சியை மேற்கொண்டு தொடருவோம். யோபுவினுடைய சொந்த ஊரைக் குறித்து யோபு 1 : 1-இல் வாசிக்கிறோம். ஊத்ஸ் தேசத்தில் யோபு என்னும் பேர் கொண்ட மனுஷன் இருந்தான்..... இந்த ஊத்ஸ் தேசம் புவியியல் கணிப்பின்படி மீதியான் தேசத்தினை ஒட்டி உள்ள பகுதியாகும். இந்த மீதியான் தேசத்துக்கும், மோசேக்கும் மிகுந்த சம்மந்தமுண்டு. பார்வோன் அரண்மனையை விட்டு தப்பியோடிய மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாகிய எத்திரோவின் வீட்டில் அடைக்கலம் புகுந்து அவரின் மகளை மணந்து ஆடு மேய்ப்பவனாய் அங்கே நாற்பது ஆண்டு காலம் தங்கியிருந்தார்.

யோபு வியாதி நீங்கின பிறகு 140 வருஷம் உயிரோடு இருந்தான் என்று யோபு 42 : 16-இல் வாசிக்கிறோம். இந்த இளைப்பாறுதலின் நாட்களில் யோபு தன் சரிதையை எழுத (தொகுக்க) அந்த நாட்களில், அந்தப் பகுதியில் தங்கியிருந்த மோசே யோபுவைச் சந்தித்து இந்த வரலாற்றை அறிந்திருக்கலாம் என்றும் அந்த அடிப்படை மூலத்தின் மேல்தான் மோசே இப்புத்தகத்தை எழுதி இருக்கலாமென்றும் திடமாக நம்ப வாய்ப்பிருக்கிறது.

மோசேயின் காலத்திலும், யோபுவின் காலத்திலும் எழுதும் அல்லது எழுதிவைக்கும் வழக்கம் உண்டா என்ற கேள்வி உங்களுக்கு பதில் தரும் முகத்தான் யோபுவின் சார்பில் ஒரு வசனத்தையும் மோசேயின் சார்பில் ஒரு வசனத்தையும் கீழேத் தருகிறேன். வாசித்து பதில் காணுங்கள்.

**யோபு 19 : 23,24 "ஆ" நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புத்தகத்தில் வரையப்பட்டு அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் உளி வெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும்.**

**யாத் 17 : 14 "பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி இதை நினைவுகூரும் பொருட்டு நீ ஒரு புத்தகத்தில் எழுதி யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி அமலேக்கை வானத்தின் கீழெங்கும்... என்றார்."**

இந்த இரண்டு வசனங்களால் இந்த இரு நபர்களின் காலத்தில் நினைவுக் குறிப்புகளை எழுதி வைக்கும் வழக்கம் மற்றும் பழக்கம் இருந்ததை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

யோபு தேவனிடத்தில் பேசினது போலவே மோசேயும் மலையில் தேவ சமூகத்தில் பல நீண்ட ஒரு வரலாற்றையும் தேவலோக இரகசியத்தையும் கேட்டு அறிந்தவர். யோபுவின்



புத்தகத்தில் பிந்தின பகுதிகளில் பலவிதமான ஆழ்ந்த தேவ இரகசியங்கள் பொதிந்து இருக்கிறது. இப்பேர்ப்பட்ட காரியங்களை தேவனோடு முகமுகமாய்ப் பேசின மோசே எழுதியிருப்பார் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

யூதர்கள் தொன்று தொட்டே இந்த யோபுவின் புத்தகத்தை நீதி படிப்பினையாக வைத்து வாசித்து வருகின்றனர். பொதுவாகவே இஸ்ரவேலர்கள் மோசேயின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். எனவே இது மோசேயினால் எழுதப்பட்டு (தொகுக்கப்பட்டு) அனுமதிக்கப்பட்ட புத்தகம் என்று தெரிகிறது.

முடிவாக இப்புத்தகத்தை எந்தத் தனிநபர் எழுதினார் என்பதில் ஐயப்பாடுகள் இருந்தாலும் 11 தீமோ 3 : 16ன் படி வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக..... பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. இந்த வார்த்தையின்படி யோபு அல்லது மோசே தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதினால் இதை பரிசுத்த ஆவியானவரே எழுதினார் என்பது உச்சிதமாகும்.

**4. இப்புத்தகத்தின் உட்பிரிவுகளும் பாத்திரங்களும் :**

ஒரு புத்தகத்தை (ஆகமத்தை) பகுதி பகுதியாகப் பிரித்து ஆராய வேண்டியது அவசியம். இப்புத்தகத்தை சம்பவங்களின் அடிப்படையில் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முதல் இரண்டு அதிகாரம் பரலோக உரையாடலும் யோபுவின் நஷ்டமும்

2. மூன்றாம் அதிகாரம் முதல் முப்பத்தொன்று வரை யோபுவும் நண்பர்களும் உரையாடுதல்.

3. முப்பத்திரெண்டு முதல் முப்பத்தேழு வரை எலிகூவின்

எதிர்வாதம்

4. முப்பத்தெட்டு முதல் நாற்பத்தியொன்றாம் அதிகாரம் வரை யோபுவும் கர்த்தரும் உரையாடுதல்.

5. நாற்பத்தி இரண்டாம் அதிகாரம் யோபுவின் மனம் திரும்புதலும் செழுமை அடைதலும்.

இப்படி பெரும் பகுதிகளாக பிரித்தாலும் இவைகளில் இடம்பெறும் முக்கியமான பாத்திரங்களைக் குறித்துத் தான் தொடர்ந்து தியானம் பண்ணப் போகிறோம். நாம் காணப்போகும் முக்கிய பாத்திரங்கள் :

1. யோபு
2. சாத்தான்
3. பிள்ளைகள்
4. சோதனை ஆயுதங்கள்
5. நண்பர்கள்

இவர்களைக் குறித்து பகுதி பகுதியாக ஆவியானவர் துணைக் கொண்டு பின்வரும் அதிகாரங்களில் ஆராய்வோம்.

# 2

# உத்தமனாகிய யோபு !

**1. தெய்வீக வாழ்வு :**

வேத புத்தகத்தில் யோபுவின் ஆகமத்தை ஆரம்பிக்கின்ற விதமே அலாதிதான். ஊத்ஸ் தேசத்தில் யோபு என்னும் பேர் கொண்ட மனுஷன் இருந்தான். அவன் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். இந்த முதல் அதிகாரத்தில் யோபுவை அறிமுகப்படுத்தும்பொழுது 2 காரியங்கள் மேன்மைப்படுத்தப்படுகிறது. முதலாவது அவனது ஆவிக்குரிய ஜீவியம். இரண்டாவது அவன் செழுமையின் ஜீவியம். பொதுவாக ஒரு மனிதனை அறிமுகப்படுத்தும்பொழுது அவனது உலகப்பிரகாரமான வாழ்வின் வளத்தைத்தான் முதலில் எடுத்து இயம்புவார்கள். ஆனால் வேதம் இந்தத் தார்மீகத்தை மாற்றி உள்ளது.

யோபு ஐசுவரியவான் என்ற வார்த்தைக்கு ஏதோ ஒரு சாதாரணமாக பணம் மாத்திரம் உடையவன் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டே என்னோடு கூட மனக்கண்ணினால் ஊத்ஸ் தேசத்தை கொஞ்சம் நோக்கிப் பாருங்கள். ஆ! அதோ ஏராளமான மேய்ப்பர்கள் மேய்த்துக் கொண்டு இருக்கும், கண்ணுக்கு எட்டின தூரம் வரை கடற்கரை மணலைப் போல் தெரிகிறதே, அந்த 7000 ஆடுகளும் அதன் மேய்ப்பர்களும் நமது யோபுவுக்கு சொந்தம்!

உங்கள் கண்களைக் கொஞ்சம் திருப்புங்கள். மணல் முகடுகள் போல் முதுகுகளை உயர்த்திக் கொண்டு நிற்கும் அந்த

3000 ஒட்டகங்களும் அதன் பணியாளர்களும் அவர்கள் தங்கும் சின்னக் குடில்கள் தெரிகிறதே, அனைத்தும் அந்த ஆண்டான் யோபுவுக்கு சொந்தமானவை.

அப்பப்பா! ஏவுகணைகள் நிறுத்தி வைக்கப்பட்டது போல் அதோ தெரிகிறதே, அந்த ஏற்ற மிகு ஏர் முட்டுகளும் அதன் அருகே கட்டி வைக்கப்பட்டிருக்கும் ஐந்நூறு ஏர் மாடுகளும் அதை ஓட்டும் விவசாயக் குடிமக்களும் அவர்கள் குடில்களும், இந்த எஸ்டேட் எஜமான் யோபுவுக்குச் சொந்தமானவைகள்.

கழுத்து வலிக்கிறதா? கொஞ்சம் கரிசனையோடே கவனியுங்கள்! இந்தக் கானகத்து கப்பல்களாம் கழுதைகள் ஐந்நூறு கட்டப்பட்டிருக்கிறதே அவைகளும் இந்தக் கனவான் யோபுவுக்குச் சொந்தமானவைகள்!

ஆம், யோபு ஐசுவரியவான் மாத்திரமல்ல, ஐந்நூறு ஏர் மாடுகளை வைத்து உழுகின்ற அளவுக்குக் காணியும், குத்து மதிப்பாய் பதினோராயிரம் மிருக ஜீவன்களும், அத்தனை மிருக ஜீவன்களை, வயல்வெளிகளை பராமரிக்கும் பல நூறு பணியாட்களையும் கொண்ட, ஆஸ்தியும் அதிகாரமும் தட்டிக் கேட்க ஆளில்லாத தன்னிகரற்ற தனித் தனவந்தனாய் திகழ்ந்தவர்தான் இந்த யோபு.

சற்று யோசித்துப் பாருங்கள். இப்படி ஒரு மனிதனுக்கு திரண்ட ஆஸ்தியும் அதிகாரமும் இருந்தால் அவன் எப்படி இருப்பான்? நிச்சயமாக 99.9 சதவிகிதம் தேவ பயம் அற்றவனாகத்தான் இருப்பான். நீதிமொழி 30 : 9இல் நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யாரென்று சொல்லாதபடிக்கு.... என்று எழுதியிருக்கிறது. ஆம், பரிபூரணம் வரும்பொழுது பயமும் பக்தியும் பறந்து போய்விடுவது உண்மை. நமது அருள்நாதர் இயேசுவும், ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும். ஆனால் ஐசுவரியவான் பரலோகத்தில் பிரவேசிப்பது



அரிது என்றார். மெய்யான கூற்றுயிது. ஆனால் இந்த இரண்டு வசனங்களிலிருந்தும் விடுதலையாகி தேவன் மெச்சும் தெய்வீக வாழ்வை வாழ்ந்தவர் இந்த உத்தமனாகிய யோபு.

இன்றைக்கு வெளிவருகிற அரசியல் மற்றும் சமுதாய வாராந்திரப் பத்திரிக்கைகளை வாசித்தால் வராத வருத்தங்களே கிடையாது. அதிகாரங்களும் ஐசுவரியமுமல்ல. கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைத் தலைவர்களும் செய்யும் செய்யத்தகாத தேவ பயமற்ற செய்கைகள் எத்தனை எத்தனை வெளிவருகிறது தெரியுமா? ஆனால் அளவிட முடியா அதிகாரமும் ஆஸ்தியும் கொண்ட யோபுவின் தெய்வீக வாழ்வைக் குறித்த மூன்று நிலைகளை ஆவியானவர் அழகுற எழுதியிருக்கிறார்.

யோபு முதல் அதிகாரம் முதல் வசனத்தில் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான் என்று எழுதி இருக்கிறது. முதலாவது அவன் உத்தமன்; யார் உத்தமர்கள்? (1 சாமு 15 : 22) நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தல் உத்தமம். அதாவது வேத வசனத்தின்படி வாழ்வு செய்கிறவர்கள்; தேவனுடைய சபைக்கும் தேவ ஜனத்துக்கும் இடறல் ஏற்படாவண்ணம் வெளியரங்கமாய் வாழுகிற ஆவிக்குரிய வாழ்வு நம்மை உத்தமனாய் மாற்றும்.

அடுத்து சன்மார்க்கனாகிய யோபு. சன்மார்க்கம் என்பது சமுதாயத்தில் வாழ்கின்ற செவ்வையான வாழ்வு, நாங்கள் தேவனுக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம் (11 கொரி 8 : 21) என்று பவுல் அழகுற எழுதி இருக்கிறார். அவரைப் போலவே சபையும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ரோமர் 12 : 17-ல் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவை களைச் செய்ய நாடுங்கள் என்று சபைக்கு ஆலோசனை

சொல்லுகிறார்.

நாம் தேவனுடைய வசனத்தின்படி வாழ்கிறோம் என்று சபைகளிலே முதன்மையான இடத்திலும், மார்க்க ரீதியான காரியங்களில் முன்னோடியாகவும் நிற்கலாம். ஆனால் சமுதாயத்தில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் பங்கை செலுத்த தவறுவோமானால் தேவனிடத்தில் இருந்து எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளவே முடியாது.

இன்றைய பத்திரிக்கைத் தாள்களைப் பாருங்கள். இரண்டு பெண்டாட்டி கட்டிக்கொண்டவர்கள், இரயில் கொள்ளையடிப் பவர்கள், காப்பர் கம்பியை திருடுபவர்கள், சீட்டுக் கம்பனி நடத்தி இரவோடு இரவாக ஓடினவர்கள். இவர்களைக் குறித்து வெளியிடப்படும் பெயர்ப் பட்டியலில் முக்காற்பங்கு ஜான், ஆசை, டேவிட், அந்தோணி, மேரி இப்படித்தான் இருக்கிறது. இதை வாசிக்கும்போது வேதனை இதனால்தான் உலகத்தாரில் பலர் பாவம் செய்பவருக்கு பாதுகாப்பான பதுங்கு குழி கிறிஸ்தவ மார்க்கம் என்று யோசிக்கிறார்கள். இதை வாசிக்கிற தேவப்பிள்ளையே, உங்கள் மேனேஜர் உங்களைக் குறித்து என்ன யோசிக்கிறார்? உங்கள் தலைமை ஆசிரியர் உங்களைக் குறித்து என்ன யோசிக்கிறார்? உங்கள் தொழில் பங்காளர் முன்பாக உங்களுடைய செயல்பாடுகள் எப்படி?

தானியேல் சிங்கக் கெபியிலே போடப்பட்ட பொழுது இராஜா ஓடி வந்து, தானியலே, தேவன் உன்னைத் தப்புவித்தாரா? என்று கேட்கிறான். தேவன் என்னைத் தப்புவித்தார் என்று பதில் சொன்னதோடு மாத்திரமல்லாமல் தனக்கு ஏன் தேவன் அப்படி செய்தார் என்பதனுடைய காரணத்தைச் சொல்கிறார், கவனித்துப் பாருங்கள். “அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதி கேடு செய்ததில்லை” (தானி 6 : 22)



இதுதான் சன்மார்க்க வாழ்க்கை.

மனிதருக்கு முன்பாய் செவ்வையாய் உங்கள் இருதயம் இருக்கட்டும். அப்பொழுது உங்கள் வாழ்வில் அற்புதம் நிகழும். உங்கள் கொம்பு உயரும். உங்கள் சத்துருக்கள் வெட்கி நாணுவார்கள். நீங்கள் உங்கள் ஸ்தானத்தில் உயர்த்தப்படுவீர்கள். ஆனால் சமுதாயத்தில் சன்மார்க்க வாழ்வு இல்லாவிட்டால் நிலைமை தலைகீழாக மாறிவிடும். நீங்கள் சாண் ஏறினால் முழம் சறுக்கும். எல்லோருக்கும் முன்பும் எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் யோக்கியமானதை செய்ய நாடுங்கள் யோபுவாக மாறுங்கள். உங்கள் கீர்த்தி பரவும்.

யோபுவின் தெய்வீக வாழ்வின் மூன்றாவதுபடி அவன் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்பை விட்டு விலகுகிற மனுஷனாயிருந்தான். யோபு வெளிப்படையான பக்தி வாழ்வும், பொதுப்படையான சன்மார்க்க வாழ்வும் வாழ்ந்தது மாத்திரமல்ல, அவன் அந்தரங்கத்தில் தேவனுக்குப் பயந்து பொல்லாப்பை விட்டு விலகுகிற மனுஷனாயிருந்தான். அவனுடைய அதிகாரத்துக்கு அவனுடைய அந்தஸ்துக்கு எதையும் செய்து எப்படியும் மறைக்க முடியும். ஆகிலும் அவன் தேவனுக்குப் பயந்து தன் அந்தரங்க ஜீவியத்தை சுத்தமாக வைத்திருந்தான். யோபு 31 ஆம் அதிகாரத்தில் தன்னுடைய இருதய சுத்தத்தின் நிலைமையை மிகத் தெளிவாக எழுதுகிறான். தேவனுக்கு விரோதமாக ஏதும் தன் அந்தரங்கத்தில் இல்லையென்பதை மிகவும் அழுத்தமாக யோபு சொல்வது போல் நமக்கு சாட்சியிருக்க வேண்டும்.

ஒரு விசுவாச சகோதரன் காலையில் நான்கு மணிக்கு எழுந்து தனியாகக் கதறிக் கதறி ஜெபிப்பார். ஆனால் அவருக்குள் அந்தரங்கத்தில் ஜெயம் கிடையாது. புகை பிடிக்கும் பழக்கத்தை அவரால் விட முடியவில்லை. அவர் ஊருக்கு முன்பு உத்தமன் தான், உலகத்துக்கு முன்பு சன்மார்க்கன்தான்.

ஆனால் அந்தரங்கத்தில் பொல்லாப்பை விட்டு விலகவில்லை.

கர்த்தரோடிருந்த யோசேப்பு போத்திபாரின் வீட்டிலிருந்த பொழுது போத்திபாரின் மனைவியால் வந்த சோதனையில் அவன் இசைந்து போயிருப்பானானால் எவருக்குமே அக்காரியம் வெளி வந்திருக்காது. அவன் விருப்பம் போல் அங்கே உல்லாசமாய் வாழ்ந்திருக்கலாம். ஆனால் நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என்றான். இவன் தேவனுக்குப் பயந்து பொல்லாங்கை விட்டு விலகினபடியால் போத்திபாருக்கும் மேலான அதிகாரத்தில் அவனை தேவன் வைத்தார்.

இதைப்போன்றே யோபுவும், "என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி அயலானுடைய வாசலை நான் எட்டிப் பார்த்தது உண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்று மனிதர் அவள்மேல் சாய்வார்களாக" (யோபு 31 : 9,10) என்று தான் பொல்லாப்புக்கு விலகியிருந்த ஜீவியத்தைக் குறித்து திடமான சாட்சி பகருகிறான். இந்த அறிக்கையை ஒவ்வொரு விசுவாசியும் சொல்ல வேண்டும். அப்படி தைரியமாய் சொல்பவர்களே மாசற்ற மணவாட்டியாய் மாற முடியும்.

**2. சாட்சியின் வாழ்வு :**

யோபு புத்தகத்தில் முதல் அதிகாரத்திலிருந்து 42ஆம் அதிகாரம் வரை தெளிவாய் வாசித்தால் யோபுவைக் குறித்த நறுமணம் கமழும். யோபு தன் வாழ்க்கையில் ஐந்து முனைகளிலிருந்து அழியாத சாட்சி பெற்றிருக்கிறார்.

1. யோபு தமது முதலாவது சாட்சியை ஆவியானவரிடத்தில் இருந்து பெற்றிருக்கிறார். முதலாம் அதிகாரம் முதலாம் வசனத்தில் "யோபு என்கிற மனுஷன் இருந்தான். அவன் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிற மனுஷனாயிருந்தான்" வேத வாக்கியங்களெல்லாம் தேவ மனிதர்கள் சுயமாய் எழுதாமல் ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின ஏவுதலின்படி எழுதினார்கள் (11 கொரி 1 : 21). இதன் அடிப்படையில் யோபுவின் புத்தகத்தை இப்படி துவக்குவதற்கு ஆவியானவரே உதவி செய்தார். எனவே யோபு தமது வாழ்க்கையில் தூய ஆவியானவரிடத்திலிருந்து சாட்சி பெற்றிருந்தான்.



அருமையானவர்களே! தேவன் நம்மை ஒரு விசேஷமான அழைப்புக்காக அழைத்திருக்கிறார். தேவன் நமக்கு வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், யோபுவைப் போல் எல்லா நிலைமைகளிலும் தேவனுக்கு ப்ரீதியாக வாழ வேண்டுமானால், அவருடைய வருகையில் அவரை நாம் முகமுகமாய் சந்திக்க வேண்டுமானால், சத்துருவுக்கு முன்பாகவும் பரிசுத்தவான்களுக்கு முன்பாகவும் நாம் தேவனால் புகழப்பட வேண்டுமானால், முதலாவது சாட்சியை ஆவியானவரிடத்தில் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஈண்டு நமது வாழ்வை சற்று உற்று நோக்கிப் பார்ப்போம். தேவன் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளியிருக்கிறார். நம்முடைய ஆவியோடு கூட ஆவியானவர் தாமே நம்மைக் குறித்து சாட்சி கொடுக்க வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. இது மாத்திரமல்ல, மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாய்ப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் என்று எபேசியர் 4 : 30-இல் வாசிக்கிறோம். இப்படியிருக்க ஆவியை பெற்றிருக்கிற நமக்கு ஆவியானவரின் சாட்சி உண்டா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

நம்மைக் குறித்து அநேகர் புகழுகிறார்கள்; நம்மை குறித்து

அநேக வார்த்தைகளை மேன்மையாய் நம்மைச் சூழ்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்; இந்த வார்த்தைகளுக்கு நமக்குள் இருக்கும் ஆவியானவர் ஆம் என்று சொல்வாரா? இது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

நம்மில் வாசமாயிருக்கும் ஆவியானவர் நமது கிரியைகளைக் கண்டு சந்தோஷத்தோடு நம்மில் தங்கி இருக்கிறாரா, அல்லது துக்கத்தோடு நம்மைவிட்டு தனித்து இருக்கிறாரா? இதற்கு நாம் தனித்தனியே பதிலைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்.

நம்மைக் குறித்து நாமும் உறவினர்களும் சபையாரும் உயர்வானவைகளைச் சொன்னாலும் உன்னதமான கனத்தை அவர்கள் கொடுத்தாலும் உண்மையான உள்ளத்தின் ஆழத்தை ஆவியானவரே ஆராய்ந்து அறிந்திருக்கிறார். கொஞ்சம் உங்கள் மனக்கண்களுக்கு முன்பாக யோபுவைக் குறித்து ஆவியானவர் சாட்சி கொடுக்கிற காட்சியை கற்பனை செய்து பாருங்கள். அவரிடத்திலே உங்களை வைத்தால் எப்படியிருக்கும் என்று யோசியுங்கள். இதமாக இருக்குமென்றால் இதற்கு மேல் வாசியுங்கள். இயலாது என்றால் எங்கே விழுந்தீர்கள் என்று யோசியுங்கள். ஆவியானவர் தாமே உங்களை உடைத்து, உருக்கி உருவாக்கி நிரப்பி நிலையாய் நிறுத்தி காப்பாராக.

2. அடுத்து இரண்டாவது சாட்சியை முதல் அதிகாரம் 8-ஆம் வசனத்தில் கர்த்தரிடத்திலிருந்து பெற்றிருக்கிறார். பரலோகத்தின் அதிபதியான பரிசுத்த தேவன் இந்த லோகத்தின் அதிபதியாகிய பிசாசானவனைப் பார்த்து, "உத்தமனும் சன்மார்க்கனுமாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ" என்று சாட்சி கொடுக்கிறார்.

அப்பப்பா எத்தனை பாக்கியம்! படைத்த தேவனே தம் படைப்பைக் குறித்து பகைஞனிடத்தில் சாட்சி கொடுக்கிறார். ஆம், அது மேலான பாக்கியம். அதை நாம் பெற்றிடத்தான் வேண்டும். மெய் பக்தர்கள் இப்படித்தான் தேவனிடத்தில் சாட்சி பெற்றார்கள். அதனால்தான் சபையும் சரித்திரமும் இன்று வரை வாழ்கிறது.



வருகையின் நாளிலே கறையற்ற மாசற்ற மணவாட்டியாய் எதிர்கொண்டு போக வேண்டுமானால், இந்த பூலோகத்தில் நாம் உயிரோடு இருக்கும்போதே சாட்சி உடையவர்களாய் இருக்க வேண்டும். அநேக இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். ஒரு சில பரிசுத்தவான்கள் மரித்துப்போகிற சமயங்களில் அவருடைய அடக்க ஆராதனையில் அவரைக் குறித்து ஆஹா ஓஹோ என்று புகழ்வார்கள். இப்படி மனிதர்களிடத்தில் புகழ்ச்சி பெறுவது நல்லதுதான். ஆனால் உண்மையான கர்த்தருடைய பிள்ளைகள் அவர்கள் உயிரோடு இருக்கும்போதே தேவனிடத்திலிருந்து புகழ்ச்சியைப் பெறுவதே மாபெரும் சிலாக்கியம்.

எபிரேயர் 11 : 5-இல் ஏனோக்கைக் குறித்து அவன் எடுத்துக் கொள்ளப்படும் முன்பே தேவனிடத்தில் சாட்சி பெற்றிருந்தான் என்று வாசிக்கிறோம். இது மெய்யே. நாம் எடுத்துக் கொள்ளப்படும் முன்பே தேவனிடத்தில் சாட்சி பெற வேண்டும். சுருங்கக் கூறினால் சாட்சி பெற்றவர்களே எடுத்துக் கொள்ளப்பட முடியும்.

அப்படியே மோசேயைக் குறித்து ஆண்டவர் (எண் 12 : 7) அவன் என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்றும், ஆபிரகாமைக் குறித்து (ஏசாயா 41 : 8) என் சிநேகிதனாகிய ஆபிரகாம் என்றும், ஆரோனைக் குறித்து (சங். 106 : 16) என் பரிசுத்தனாகிய ஆரோன் என்றும் அழைத்திருக்கிறார்.

நாத்தான் வேலைப் பார்த்து கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றும், தாவீதைக் குறித்து என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பன் என்றார். ஆம் வாசகரே, நாம் முதலாவது நம்மில் வாசம் செய்யும் ஆவியானவரிடத்திலும், நம்மைக் காணும் பரலோகத்தின் தேவனிடத்திலும் நம்முடைய ஜீவிய நாட்களிலே சாட்சி

பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

3. அடுத்து தம்முடைய வாழ்வின் மூன்றாவது சாட்சியை சாத்தானிடத்திலே பெற்றிருக்கிறார். யோபு 1 : 9 இல் சாத்தான் சாட்சி கொடுக்கிறான். இதில் வெளிப்படையாகவே சாத்தான் சாட்சி பகருகிறான். விருதாவாகவா யோபு உம்மை சேவிக்கிறான் இந்த பதிலில் விருதாவாகவா என்ற வார்த்தையை நீக்கி விட்டு எஞ்சினவைகளை வாசித்துப் பாருங்கள், "**உம்மை சேவிக்கிறான்**" அப்பப்பா எப்பேர்ப்பட்ட சாட்சி! இதை யார் சொன்னது? சாத்தானே சொன்னான், கர்த்தருடைய பிள்ளைகளைக் குறித்து சத்துருவாகிய பிசாசு சாட்சி கொடுக்க வேண்டும், யோபு தன் வாழ்க்கையில் இந்த மேலான அனுபவம் பெற்றிருந்தான்.

பிரியமானவர்களே, நம்முடைய உள்ளிந்திரியங்களை முதலாவது ஆவியானவர் அறிந்திருக்கிறார். அதற்கடுத்து இந்த உலகத்தின் அதிபதியான பிசாசு அறிந்திருக்கிறான். நம்முடைய கோலத்தினாலும், கோஷத்தினாலும் பரிசுத்தவான்களைப் போல தோற்றமளிக்கலாம். ஆனால் தெளிவான சாட்சி நமக்கு எதிராளியினிடத்திலிருந்து வரவேண்டும்.

பிசாசைப் பார்த்து அவனிடத்தில் எனக்கு ஒன்றுமில்லை என்றும், என்னிடத்தில் அவனுக்கு ஒன்றுமில்லை என்றும் சொல்லும் அனுபவம் நமக்கு வேண்டும்.

நன்றாய் கவனித்துப் பாருங்கள். உங்கள் இரகசியங்களோ அல்லது உங்களைக் குறித்த எந்தப் பிடிப்போ சாத்தானிடத்தில் இருக்கக் கூடாது. அவ்வண்ணமே சாத்தானுக்கு சொந்தமான சரக்குகளும் கூறுகளும் நம்மிடத்தில் இருக்கக் கூடாது.

ஒரு ஊழியக்காரர் ஒருமுறை பெண்களுக்கான ஆவியின் அபிஷேகக் கூட்டத்தை நடத்தினாராம். மிக நீண்ட நேரம் பாடல்



பாடியும், ட்ரம் அடித்து கைகளை தட்டினாலும் ஆவியின் நிறைவு ஒருவருக்குமே ஏற்படவில்லை. இந்த ஊழியர் மனங்கசந்து தேவனை நோக்கி 'ஐயா' நாங்கள் இவ்வளவுநேரம் காத்திருக்கிறோமே, ஏன் உமது இன்ப சமூகமே இல்லை? இவர்கள் அபிஷேகம் பெறுவதற்கு என்ன தடை? என்று ஜெபித்த பொழுது கர்த்தர் அவருக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தாராம்.

தரிசனத்தில் நடந்த சம்பவம் என்ன தெரியுமா? அக்கூட்டத்தில் உட்கார்ந்திருந்த பெரும்பாலான சகோதரிகள் ஒவ்வொருவரின் பக்கத்திலும் குட்டிச் சாத்தான்களாகிய பிசாசின் சேனைகள் நின்று கொண்டிருந்தது. அவர் தரிசனத்தைப் பார்த்தவுடன் ஆவியிலே நிரம்பி அவைகளை விரட்டினாராம். அந்தக் குட்டிச் சாத்தான்கள் "நாங்கள் போக மாட்டோம், போகவே மாட்டோம். காரணம் எங்களுடையவைகள் இவர்களிடத்தில் இருக்கிறது" என்றன.

உடனே இந்த தேவனுடைய மனுஷன் அவைகளை பார்த்து உங்களுடையது என்ன இருக்கிறது என்று கேட்டபொழுது, அவைகள் சொன்னதாம், "இவர்கள் தலையிலே வைக்கப்பட்டிருப்பது திருப்பதியில் செலுத்தின முடியினால் செய்த சவுரி (இடுமுடி) ஆண்டவனுக்குப் படைக்கப்பட்டது. இது எங்கள் சொத்து" என்று உரிமை கொண்டாடின!

உடனே இந்த ஊழியர் தரிசனத்திலிருந்து எழும்பி மக்களுக்கு இந்த செய்தியை சொன்னாராம். செய்தியைக் கேட்ட அலங்கார அம்மணிகள் தங்கள் சிகையிலிருந்து பொய்முடியை எடுத்தெறிந்தார்களாம். அதே சமயத்தில் ஊழியர் மறுபடியும் அந்த தரிசனத்தின் தொடர்ச்சியைக் கண்டாராம். அந்தக்குட்டிச் சாத்தான்களின் கூட்டம் இந்த வீசி எறியப்பட்ட சவுரி முடியை சந்தோஷமாகத் தூக்கிக் கொண்டே ஓடினதாம். அப்பொழுது ஆவியானவர் பலமாய் இறங்கி ஒவ்வொருவரையும் தமது

மகிமையின் பிரசன்னத்தினால் நிரப்பினாராம்.

இந்த சம்பவம் மிகச் சாதாரணமாக, நகைப்பாக உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் சற்று தீவிரமாய் யோசித்துப் பாருங்கள் உங்களிடத்தில் இப்பொழுது பிசாசு ஒரு பக்கமும் கர்த்தர் ஒரு பக்கமும் நிற்பார்களாகில் "என் நேசரே, இந்த உலகத்தின் அதிபதி பிசாசு நிற்கிறான். என்னிடத்தில் அவனுடையது ஒன்றுமில்லை" என்று உங்களால் கூறமுடியுமா? இங்கே யோபு பிசாசினிடத்தில் சாட்சி பெறுகிறான். அவன் உம்மை சேவிக்கிறான். இந்த சாட்சியை எதிர்பாருங்கள். இந்த சாட்சியோடு வாழுங்கள்.

ஒரு தேவனுடைய ஊழியக்காரர் இருந்தார். அவர் கர்த்தரை விட்டு தன் ஜீவியத்தில் பின்வாங்கி விட்டார். ஆனால் அவர் அந்தரங்க விழுகை அவரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. அவர் தனது ஊழிய நாட்களில் அநேக பிசாசுகளை துரத்தினதை அநேகர் அறிவர். ஒருநாள் ஒரு பெண்ணுக்கு பிசாசு பிடித்து ஆடிக் கொண்டிருந்தது. மக்கள் இந்த பெண்ணை அந்த குறிப்பிட்ட ஊழியரிடத்தில் ஆவலோடு கொண்டு வந்தார்கள்.

பிசாசு பிடித்து ஆடிக்கொண்டிருந்த பெண்மேல் கைகளை வைத்து ஜெபித்து, மிகுந்த வைராக்கியத்தோடே இயேசுவின் நாமத்தில் போ என்று கட்டளையிட்டார், உடனே அந்த பிசாசு நின்று நிதானமாக "ஏய் இயேசு கிறிஸ்துவை எனக்குத் தெரியும், உன் பாக்கெட்டிலிருக்கிற காஜா பீடியை வெளியே எடு" என்றதாம். அவ்வளவுதான் இந்த ஊழியக்காரர் திரும்பிப் போய் கர்த்தர் சமூகத்தில் மனங்கசந்து அழுதாராம்.

தன் விழுகையினையும் பின்மாற்றத்தையும் ஒப்புக் கொண்ட இவரை தேவன் புதுப்பித்தார். அடுத்த நாள் இவர் இந்தப் பிசாசு பிடித்த பெண்ணை தேடிச் சென்று ஜெபிக்க ஆரம்பித்தாராம். "ஐயோ, யேசு உன்னோடு இருக்கிறார். நான்



போகிறேன்" என்று கதறிக் கொண்டே அசுத்த ஆவி ஓடியதாம்.

ஆம்! சாத்தான் நம்மையும் அறிவான்; நம் அந்தரங்கங்களையும் அறிவான். கர்த்தருடைய பிள்ளைகளே, அவருடைய மகிமையான வருகையில் நாம் பங்கேற்க வேண்டுமானால் கர்த்தரிடத்தில் மாத்திரமல்ல, இந்த உலகத்தின் அதிபதியானவரிடத்திலும் மகிமையான சாட்சியை பெற்றிருத்தல் அவசியம்.

4. யோபு 2 : 9 ஆம் வசனத்தில் தனது சொந்த மனைவியினிடத்தில் நான்காவது சாட்சியை பெற்றிருக்கிறார். யோபுவின் மனைவி யோபுவைப் பார்த்து "**இன்னும் நீர் உம்முடைய உத்தமத்தில் இருப்பது என்ன?**" என்றாள். அதனுடைய அர்த்தம் என்ன தெரியுமா? இத்தனை நெருக்கத்திலும் உபத்திரவத்திலும் உத்தமனாய் யோபு திகழ்ந்தார் என்பதே.

சாத்தானிடத்தில் கூட சாட்சி வாங்கி விடலாம். ஆனால் இந்த மனைவிகளிடத்தில் சாட்சி வாங்குவது மாபெரும் பாடு என்று என் சபை மக்களிடத்தில் அடிக்கடி சொல்வேன். புருஷன் தன் சொந்த மனைவியிடத்திலும் மனைவி தன் சொந்தப் புருஷனிடத்திலும் நற்சாட்சி பெற்றிருத்தல் அவசியம். சுருங்கக் கூறின் ஒவ்வொரு விசுவாசியும் அவர்தம் குடும்பத்தின் அங்கத்தினரிடத்தில் சாட்சி பெற்றிருக்க வேண்டும்.

யோபுவுக்கு எத்தனையோ உபத்திரவங்கள், எத்தனையோ சோதனைகள், எத்தனையோ வேதனைகள் இவைகள் எல்லாவற்றிலும் தன் உத்தமத்திலே நிலை நிற்கின்றார் என்று தன் புருஷனைக் குறித்து மனைவி தருகிற சாட்சி எத்தனை மகிமையானது பார்த்தீர்களா?

ஒருமுறை ஒரு கூட்டத்திலே ஒரு ஊழியர் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். நானும் பின் வரிசையிலே உட்கார்ந்து அந்த

செய்தியை கவனித்துக் கொண்டிருந்தேன். அந்த ஊழியர் மிகவும் துள்ளிக் குதித்து ஆவியில் நிறைந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.

செய்தியின்போது, "மேடைக்கு வந்தால் தேவதூதனைப் போல பிரசங்கிக்கிறார். கீழே இறங்கி வந்தால் பிசாசின் தூதராய் மாறிவிடுகிறார்" என்ற மெல்லிய சத்தம் என் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன். அங்கே நின்றது தேவதூதனல்ல. அந்தப் பிரசங்கியாரின் மனைவி தான் அதைச் சொன்னார்.

கூட்டம் முடிந்தவுடன் அந்தச் சகோதரியைப் பார்த்து என்ன சகோதரியே பொறுமை இழந்து இந்த வார்த்தையை சொல்லிவிட்டீர்களே என்றேன். அதற்கு அந்த அம்மையார் "பாஸ்டர்" என் புருஷன் பொது இடங்களில் வரும்பொழுது தேவனுடைய மனுஷனாக இருக்கிறார். வீட்டிலே வரும்போது அவரால் ஒவ்வொரு நாளும் நான் சித்திரவதைப்படுகிறேன் என்றார். தொடர்ந்து சொன்னார் : "அவருடைய வார்த்தையும், வசனங்களும் வாயிலிருந்து வருகிறதே தவிர அவருடைய வாழ்க்கையிலிருந்து வரவில்லை."

அன்புள்ளோரே, நாம் நமது சாட்சியை நமது குடும்பத்தில் உள்ளவரிடத்தில் பெறவேண்டும். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் முதலாவது எருசலேமிலும், அடுத்து சமாரியாவிலும், உலகத்தின் முடிவு பரியந்தம் சாட்சிகளாயிருப்பீர்கள். இவ்விடத்தில் உங்கள் ஆவியின் சாட்சியின் வாழ்வை எருசலேம் என்னும் சொந்த வீட்டிலிருந்து ஆரம்பிக்கவே தேவன் விரும்புகிறார்.

நோவாவின் குடும்பத்திலே அத்தனை பேரும் மீட்கப்பட்டதற்குக் காரணம் நோவாவின் சாட்சியுள்ள வாழ்க்கையே. இன்று ஊழியர்கள் உட்பட இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளின் குடும்பத்தில் மற்ற அங்கத்தினர் இரட்சிக்கப்பட்ட



முன்னோடிகளே! இந்த தகவலை அநேக குடும்பத்தில் நேரடியாக கேட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமானால் வெளி உலகத்தாரிடத்திலேயும், சபைப் போதகரிடத்திலும் சாட்சி பெறுவது மாத்திரமல்ல, உங்கள் சொந்தக் குடும்பத்தினிடத்தில் "இவர் மெய்யாகவே தேவனுடைய மனுஷன், தேவனுக்குப் பயப்படுகிற மனுஷன்" என்ற சாட்சியை பெற்றிருத்தல் மிகவும் அவசியம்.

5. யோபு 27 : 35-ம் வசனத்தில் யோபுவுடைய சொந்த மனசாட்சியே சாட்சி கொடுக்கிறது. "என் உத்தமத்தை தராசிலே வைத்து நிறுத்துப் பாரும்" என்று 31 : 6-இல் யோபே சொல்லுகிறார். சாட்சியின் வாழ்வின் வரிசையில் ஐந்தாவதாக நம்மைக் குறித்து நமக்கே நல்ல சாட்சி இருக்க வேண்டும்.

ஒருமுறை சென்னையிலே ஒரு பிள்ளைக்குப் பிறந்த நாளுக்காக ஜெபிக்கச் சென்றேன். அந்த பெண் பிள்ளையை வாழ்த்தி அதன் தலை மேல் கைகளை வைத்து ஜெபித்தேன். அந்த ஜெபத்தின் சில வரிகள் இதோ, "ஆண்டவரே இந்த மகளை நீர் ஆசீர்வதியும், இவள் தன் தாயைப் போல அநேகருக்கு ஆசீர்வாதமாகவும், படிப்பிலேயும், பரிசுத்தத்திலேயும் தாய்போல் வளர கிருபை செய்யும்" என்று ஜெபித்து முடித்தேன். ஜெபத்திற்குப் பின் கண்களைத் திறந்து பார்த்தபொழுது அந்த சகோதரி கண்ணீர்விட்டு அழுதுகொண்டே நின்றது என்னைக் கலங்கச் செய்து விட்டது.

அவர்கள் ஏன் அழுகிறார்கள் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. "சிஸ்டர் ஏன் அழுகிறீர்கள்?" என்றேன். பாஸ்டர் நீங்கள் ஜெபித்த ஜெபம்தான் என்னை வேதனைக்குள்ளாக்கி விட்டது என்றார். தொடர்ந்து "என் மகளை கர்த்தர் ஆசீர்வதிக்கட்டும். ஆனால் அவள் என்னைப் போல் வரவே

கூடாது" என்று தன் வாழ்க்கையிலிருக்கிற விழுகையை வெளியே சொல்ல முடியாதபடி இந்த வார்த்தையை சொன்னார்.

மீண்டும் கதறிக் கொண்டே 'ஜயா' என் மகள் தேவனுக்குப் பயந்தவளாக இருக்க வேண்டும். ஆனால் என்னைப்போல் அவள் வரவே கூடாது என்று மீண்டும் ஒருமுறை ஜெபியுங்கள், என்றார். என் உள்ளம் உடைந்து விட்டது. மீண்டும் ஒருமுறை அந்தப் பிள்ளையின் மேல் கைகளை வைத்து உருக்கமாக, இந்தப் பிள்ளையை வேதத்தில் சொல்லியிருக்கிற எஸ்தரைப் போல, தெபொராளைப் போல மாற்றும் ஆண்டவரே என்று ஜெபித்து முடித்தேன்.

பார்த்தீர்களா? அந்தத் தாயின் வாழ்க்கையை, அவள் வாழ்க்கையின் பின்பக்கம் சகதியான பக்கம், மறுபக்கம் சரிந்து போன பக்கம் இன்றைக்கு உங்களைக் குறித்து உங்கள் சாட்சி என்ன?

எசேக்கியா ராஜாவைக் குறித்த மரணத் தீர்ப்பு (அறிவிப்பு) தீர்க்கனாகிய ஏசாயா மூலம் வீட்டு வாசலுக்கே வருகிறது. ஆனால் எசேக்கியா அந்த மரணத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, தேவனைப் பார்த்து, "ஆண்டவரே என் உத்தமத்தை நினைத்துப் பாரும்" என்று கதறுகிறான்; ஆண்டவரும் நினைத்துப் பார்க்கிறார். நடந்தது என்ன? தீர்ப்புகள் திருத்தப்படுகிறது. தீர்க்கதரிசனம் உரைத்தவர் திரும்பி வருவதற்கு முன்னாகவே திட்டங்கள் மாற்றப்பட்டாயிற்று. வாசல் வரை சென்ற ஏசாயா வந்த வழியே திரும்பி வந்து உனக்கு 15 ஆண்டுகள் கூட்டிக் கொடுக்கப்பட்டது என்று எசேக்கியாவினிடத்தில் சொல்வதைப் பார்க்கிறோம். நம் உத்தமத்தைக் குறித்து நாமே சாட்சி கொடுக்க முடியுமா?

தனது வாழ்வில் முதலாவது ஆவியானவரிடத்திலும் இரண்டாவதாக தேவனிடத்திலும், மூன்றாவதாக இந்த



உலகத்தின் அதிபதியான பிசாசினிடத்திலும், நான்காவது குடும்பத்தாரிடத்திலும், ஐந்தாவது சொந்த மனசாட்சியினிடத்திலும் யோபு சாட்சி பெற்ற மனுஷனாயிருந்தான்.

**3. ஆசாரிய வாழ்வு :**

யோபுவுக்கு ஏழு குமாரரும் குமாரத்திகளும் இருந்தார்கள் ஒவ்வொருவரும் அவரவர் நாளிலே விருந்து செய்தார்கள் என்று யோபு 1 : 4-இல் வாசிக்கிறோம். விருந்து செய்கிற நாள் முடிகிறபோது, "ஒரு வேளை என் பிள்ளைகள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருப்பார்களோ" என்று எண்ணி அவர்களுக்காக சர்வாங்க தகனபலியை தேவ சமூகத்தில் செலுத்தினான் என்று யோபு 1: 5-ல் வாசிக்கிறோம்.

யோபு குடும்பத்தில் சாட்சி பெற்றது மாத்திரமல்ல, தன் குடும்பத்திற்கு நல்ல ஆசாரியனாகத் திகழ்ந்திருக்கிறார். ஒவ்வொரு குடும்பத் தலைவருக்கும் இந்த பொறுப்பான ஊழியத்தை தேவன் கொடுத்து இருக்கிறார். ஒரு போதகரும் அவரின் மனைவியும் தங்கள் சபைக்காக எப்படி பாடுபடுகிறார்களோ, பாரப்படுகிறார்களோ அப்படியே ஒவ்வொரு குடும்பத் தலைவனும், தலைவியும் தத்தம் குடும்பத்திற்கு ஆசாரியப் பணிவிடைகளை செய்ய வேண்டும்.

யோபுவின் பிள்ளைகள் பாவம் செய்தார்கள் என்று வேதம் சொல்லவில்லை. ஆனால் யோபுவின் பார்வை வித்தியாசமாக இருக்கிறது. ஒருவேளை என் பிள்ளைகள் பாவஞ்செய்திருப்பார்களேயானால் என்று பிள்ளைகளைக் குறித்து யோசனை செய்கிறான். இன்றைக்கு அநேக பெற்றோர்கள் தவறி விடுகிறார்கள். அன்றைக்கு யோபு பிள்ளைகள் பாவம் செய்யாததற்கு முன்பே, செய்திருப்பார்களோ என்று யோசிக்கிறான்.

நவீன பெற்றோர்களோ, தத்தம் பிள்ளைகள் செய்த

தவறை அநேகர் சுட்டிக் காட்டினாலும் எங்கள் பிள்ளைகள் இப்படி செய்ய மாட்டார்கள் என்று ஒரே வரியில் சாதித்து முடித்து விடுகிறார்கள். சபைப் போதகர் பிள்ளைகளின் குறைகளை சுட்டிக்காட்டும் பொழுதும் அதை ஏற்றுக் கொள்ளாமல் தங்கள் பிள்ளைகள் மேலுள்ள அன்பினால் போதகரைக் கசந்து கொண்டு சபையை விட்டுப் போய்விட்ட குடும்பங்கள் எத்தனையோ!

பிள்ளைகளை நேசிக்க வேண்டும். ஆனால் அவர்கள் தவறுகிற ஒவ்வொரு காரியத்திலேயும் சிட்சித்து திருத்தி வளர்க்க வேண்டியது முக்கியம். யோபு தன் பிள்ளைகளை அழைத்து தேவ சமூகத்தில் அவர்கள் உணர்வடையும் பொருட்டு அவர்களுக்கு முன்பாகவே பலிசெலுத்தி தனது ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றுகிறான்.

பிரியமானவர்களே, சங்கீதக்காரனாகிய தாவீது சொல்வதை கவனித்துப் பாருங்கள். "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்; நான் துர்க்குணத்தில் உருவானேன்" இந்த வார்த்தையின்படியே நம்முடைய ஜென்ம சுபாவமும், நம்முடைய ஜென்ம பாவமும் பிள்ளைகளிடத்தில் பிரதிபலிக்கிறது. எனவே பிள்ளைகளை சரியான பாதையில் நடத்த வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆபிரகாம் அந்நிய தேசத்தில் தன் மனைவியை அறிமுகம் செய்யும் பொழுது சகோதரி என்று சொல்லுகிறான் இந்தத் தம்பதிகளுக்கு பிறந்த ஈசாக்கும் அந்நிய தேசத்திலே தன் மனைவியை சகோதரி என்று பொய் சொல்லுகிறான் பாருங்கள். தகப்பனாகிய ஆபிரகாமின் தவறுகள் தவப்புதல்வனாகிய ஈசாக்கினிடத்தில் பிரதிபலிக்கிறது. பெற்றோர்களே, உங்கள் வாழ்நாட்களில் உங்களுக்கு இருந்த சுபாவங்கள் இரட்டிப்பாய்



உங்கள் பிள்ளையினிடத்தில் இருக்கும், கவனமாயிருங்கள்.

அநேகம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறித்து சொல்லப்படும் காரியங்களை எடுத்துக் கொள்வதற்கு பதிலாக காரியங்களை சொன்னவர்கள் மேல் எரிந்து விழுகிறார்கள். இவர்கள் இப்படித்தான் என் பிள்ளைமேல் பொறாமை, என் போதகர் இப்படித்தான் எங்கள் குடும்பத்தைக் கண்டாலே எரிச்சல் என்று அலுத்துக் கொண்டு பிள்ளைகள் மேலுள்ள அன்பினால் பிழைகளை மூடி மறைத்து விடுகின்றனர். பெற்றோர்களே, கவனம் தேவை. வேதத்திலுள்ள திருஷ்டாந்தங்களை கவனித்துப் பாருங்கள்.

ஆசாரியனாகிய ஏலிக்கு பிறந்த பிள்ளைகளை குறித்து சாமுவேலைக் கொண்டு தேவன் எச்சரிப்பு செய்கிறார். எச்சரிப்பு பெற்ற ஏலி எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. 1 சாமு 3 : 18-இல் கர்த்தர் அவர்களைப் பார்த்துக் கொள்வார் என்று சொல்கிறார். உங்கள் பிள்ளைகளின் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் பொழுது பிள்ளைகளைக் குறித்த காரியத்தில் நீங்கள் இந்த தவறை செய்துவிடாதீர்கள். கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று ஒருவரும் சொல்லக்கூடாது. மல்கியா 2 : 15-இல் பரிசுத்தமுள்ள சந்ததியை பெறும்படிதான் குடும்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார். பிள்ளைகளை பரிசுத்தத்தில் வளர்க்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் உரியது உங்களுக்கும் உண்டு. அதைத் தட்டிக் கழிக்காதீர்கள்.

பிள்ளைகளைக் குறித்த காரியத்தில் ஏலி செய்த இரண்டு தவறுகளை தேவன் சாமுவேல் மூலம் சுட்டிக் காட்டுகிறார்.

1. நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன் (1 சாமு 2 : 29)

2. ..... குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறார்கள் என்று அறிந்திருந்தும் அவர்களை

அடக்காமற்போன பாவத்தினிமித்தம் நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத் தீர்ப்பு செய்வேன். (1 சாமு 3 : 13).

மேற்கண்ட இருவசனங்களில் ஏலி தேவனைக் காட்டிலும் தன் பிள்ளைகளை அதிகமாய் நேசித்தான் என்றும், தன் பிள்ளைகளுடைய தீங்கை நினைத்து அவர்களை அடக்கவில்லை என்றும் காண்கிறோம்.

ஒரு காலத்தில் இந்த லேவியர்கள் சகோதரனென்றும், குமாரனென்றும் பாராமல் பாவம் செய்தவரை பட்டயத்தால் கொன்று தேவன் பட்சத்தில் நின்றார்கள். ஆனால் லேவி கோத்திரத்தில் வந்த ஏலியோ தன் பிள்ளைகளை தேவனைக் காட்டிலும் நேசித்ததினால் தேவ வார்த்தையை நிறைவேற்றாமல் போனான்.

தாவீது வாழ்க்கையில் இதே தவறைக் காண்கிறோம். 1 இராஜாக்கள் முதலாம் அதிகாரத்தில் இந்த சம்பவத்தை வாசிக்கலாம். தாவீது அதோனியா என்பவனை தன் மனைவியாகிய ஆகீத்துக்குப் பெற்றான் (1 இராஜா 1 : 5). தாவீதுக்குக் கடைசி நாளில் அபிஷாகு என்பவளை மனைவியாகக் கொடுத்தார்கள். தாவீதின் மரணத்திற்குப் பிறகு சாலோமோன் அரசனானான்.

அரச பதவியை இழந்த அதோனியா அதற்கு பதிலாக என்னத்தைக் கேட்டான் தெரியுமா? தன் தகப்பனின் மனைவியாகிய அபிஷாகை தனக்கு மனைவியாக்கித் தர வேண்டுமென்று கேட்டான். (1 இராஜா 2 : 17) இந்த தரங்கெட்ட வார்த்தையினால் சாலோமான் அவனுக்கு மரணத் தீர்ப்பைக் கொடுத்தான்.

அதோனியாவின் இந்த மரணத்திற்கும், இந்த செயலுக்கும் காரணம் யார் தெரியுமா? அவனுடைய தகப்பனாகிய தாவீதுதான். இதற்கு முன்பே கூட இந்த அதோனியா



ராஜபதவியை தான் அடைய வேண்டும் என்று சதி வலை விரித்தான் இதற்கும் காரணம் தாவீதே கீழே வாசித்துப் பாருங்கள்.

**அவனுடைய தகப்பன் நீ இப்படி செய்வானேன் என்று அவனை ஒருக்காலமும் கடிந்து கொள்ளவில்லை. அவன் மிக அழகுள்ளவனாயிருந்தான். அப்சலோமுக்குப் பின் அவனுடைய தாய் அவனை பெற்றாள். (இராஜா 1 : 6)**

ஒருக்காலமும் கடிந்து கொள்ளப்படாததினால் தான் அதோனியா கெட்டுப் போனான். தாவீது அவனைக் கடிந்து கொள்ளாததற்கு இரண்டு காரணங்களை வேதம் சொல்லுகிறது. 1. அவன் அழகுள்ளவன் 2. அவன் அப்சலோமுக்கு அடுத்துப் பிறந்தவன்.

இன்றைக்கு அநேக குடும்பங்களில் பிள்ளைகள் கெடுவதற்குக் காரணம் பெற்றோர்களின் மேற்கண்ட இரண்டு தவறுகளே. பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் அழகாய் இருக்கிறார்கள் என்றும், நன்றாய் படிக்கிறார்கள் என்றும் உங்கள் பிள்ளைகளை கண்டிக்காமல் விட்டுவிடாதீர்கள். யாக்கோபு ராகேலை நினைத்து பென்யமீனை அதிகமாய் நேசித்தது போல, தாவீது அப்சலோமின் பிரிவுக்குப் பின் அதோனியாவை அதிகமாய் நேசித்தான். அதனால் தான் இந்த வினை வந்தது.

இன்றைக்கு அநேக பெற்றோர்கள் என் மகன் மரித்துப்போன என் அப்பாவைப்போல, என் அண்ணனைப் போல இருக்கிறான் என்று சொல்லி மரித்தவர்களுக்குப் பதிலான விக்கிரகங்களாய் பிள்ளைகளை மாற்றி விசேஷித்த சலுகைகள் காட்டுவதால் வீணான சங்கடங்கள் வருகிறது. பெற்றோரே கவனமாயிருங்கள். தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு இலச்சையை உண்டாக்குமென்று நீதிமொழிகளில்

எழுதி இருக்கிறது.

மதிப்புக்குரிய பாஸ்டர் சுந்தரம் ஐயா அவர்கள் இப்படிச் சொல்வார்கள். "பிள்ளையை அடி, நன்றாக அடி, அவன் சாகமாட்டான், அவன் ஓடிப் போனாலும் விட்டுவிடு. அவன் தேவனுக்கு விரோதமானவனாக நம்முடைய வீட்டில் இருப்பதைக் காட்டிலும் அவன் இல்லாமலிருப்பது நலம்" கேட்பதற்கு கடினமாக இருக்கிறதல்லவா? ஆகிலும் பெற்றோர்கள் அவசியம் செய்ய வேண்டியது தான் இக்காரியம்.

யோபு தன் பிள்ளைகளோடு சேர்ந்து பலி செலுத்தினான் என்று பார்க்கிறோம். இன்றோ பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கிறதை பார்க்கிறேன். பெற்றோரே அப்படியிருக்கக் கூடாது. பிள்ளைகளோடு கூட அதிக நேரம் செலவிட வேண்டும். அவர்களோடு பழகி, அவர்களோடு பேசி அவர்களை புரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அவர்களுடைய நாட்டம் என்ன, தேட்டம் என்ன, அவர்கள் ஓட்டம் என்ன என்பதைக் குறித்து தெளிவாக நாம் அறிந்து அவர்கள் பலவீனங்களில் உதவி செய்ய வேண்டும்.

யோபு இதைத்தான் செய்திருக்கிறான். அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் நெருங்கிய உறவு இருந்திருக்கிறது. அவர் தகப்பனாக மாத்திரமல்ல, பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறார்.

பிள்ளையாண்டானை நடத்த வேண்டிய விதத்தில் நடத்து. அதை அவன் முதிர்வயது வரைக்கும் விடாது இருப்பான் என்று தேவன் சொன்னதை நிறைவேற்றுகின்ற பெற்றோர்களை தேவன் எதிர்பார்க்கின்றார். நம்முடைய விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தன் சொந்த குமாரனுக்கு நல்ல தகப்பனாய் இருந்திருக்கிறார். வேத வசனத்தை கவனித்துப் பாருங்கள்.



ஆபிரகாமைக் குறித்து தேவன் அழகுற சாட்சி கொடுக்கிறார்.

"கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னதை நிறைவேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதி 18 : 19)

மேலே சொல்லப்பட்ட வசனத்தில் ஆபிரகாம் மேல் தேவனுக்கு எத்தனை நம்பிக்கை பார்த்தீர்களா? குமாரன் பிறக்காததற்கு முன்பும், சந்ததிகள் தோன்றாததற்கு முன்பும் இந்த நம்பிக்கை ஆண்டவருக்கு உண்டானதால் தான் தேவன் அவனை விசுவாசிகளுக்குத் தகப்பனாக்கினார்.

ஏலி அடுத்தவர் பிள்ளையை (சாமுவேலை) ஆவிக்குள் வளர்த்தான். ஆனால் தன் சொந்தப் பிள்ளையை அடக்காமல் போய்விட்டான்.

பெற்றோரே ! உங்கள் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித் தருகிற ஆசிரியர்களாய் அல்ல, பக்தி வழியில் நடத்துகிற ஆசாரியர்களாய் மாற உங்களை அர்ப்பணியுங்கள்.

# 3

# சாத்தான் !

இந்தத் தொகுதியில் நாம் இரண்டாவதாக கவனிக்கப் போகின்றவர் Mr.சாத்தான். இந்த சாத்தானைக் குறித்து இதுவரைக்கும் புரியாத கேள்வி ஒன்றுண்டு. அது என்னவென்றால் இவன் இந்தப் பூலோகத்தை ஆளுகின்றான் (வான மண்டல பொல்லாத சேனை) அத்தோடு நிற்கவில்லை. யோபு முதல் அதிகாரத்தை வாசித்துப் பார்த்தால் தேவனும் தேவபுத்திரரும் கூடுகிற இடத்திலேயும் இந்த சாத்தான் போய் நிற்கிறான்.

இப்படியிருக்க, இவனுக்கு இருக்கும் வல்லமை எத்தனை பெரியதென்று சிந்தித்துப் பாருங்கள். யோபுவுக்கு வந்த இத்தனை பெரிய சோதனை யாரால் வந்தது? இந்த சாத்தானால் அல்லவோ வந்தது ! எனவே கர்த்தரின் கனமான ஊழியத்தில் இந்த சாத்தானுக்கும் கணிசமான பங்கு இருக்கும் என்று கருதுகிறேன். இந்த அதிகாரத்தில் சாத்தானின் தன்மைகளையும், குணாதிசயங்களையும் காணப்போகிறோம்.

**1. ஊர் சுற்றும் சாத்தான்**

யோபு முதல் அதிகாரம் 9-ம் வசனத்தில் கர்த்தர் சாத்தானைப் பார்த்து எங்கேயிருந்து வருகிறாய் என்றார். அதற்கு சாத்தான் சொல்லுகிற பதில் மிகவும் விசித்திரமானது. “நான் பூமியெங்கும் சுற்றி உலாவி வருகிறேன்“ பதிலைப் பார்த்தீர்களா ! சாத்தான் சும்மா வருவது கிடையாது. சுற்றி உலாவி வந்தானாம். காரணமில்லாமல் அவசியமில்லாமல் சுற்றித் திரிவது சாத்தானின் வேலை. சாத்தானின் கிரியைகளில் ஊர் சுற்றுவதும்



உலா வருவதும் ஓர் பங்கு. விசுவாசிகள் தேவையில்லாமல் உலா போவதும், ஊர் சுற்றி வருவதும் பிசாசின் ஆளுகைக்கு இடங்கொடுப்பதாகும்.

இப்பொழுதெல்லாம் சாத்தான் ஊழியங்களை நவநாகரீகமாக மாற்றி விட்டான். இப்பொழுது எங்கு பார்த்தாலும் சுவிசேஷ சுற்றுலா என்று உலாப் போகிறார்கள். ஆனால் சுவிசேஷத்தை அவர்கள் அறிவிப்பதில்லை. வேடிக்கை பார்க்கவும் கேளிக்கைக்காகவுமே செல்லுகிறார்கள். இது சாத்தானின் மிகப்பெரிய தந்திரம். உலாப் போங்கள். குடும்பமாகவோ சபையாகவோ போய் வாருங்கள். அதில் தவறு இல்லை. அது ஐக்கியத்தைப் பெலப்படுத்தும். அதை வெளிப்படையாக சொல்லிவிட்டுப் போங்கள். ஆனால் சுவிசேஷ சுற்றுலா என்றுமாய்மாலமான பெயரை வைத்து மாய்த்துக் கொள்ளாதீர்கள்.

சாத்தான் பூமியை சுற்றி வந்தான் என்று மட்டும் எழுதப்படவில்லை. கூடவே திரிந்து வந்தான் என்று எழுதியிருக்கிறது. ஆங்கில வேதாகமத்தில் From going to and fro in the earth, and from walking up and down in it என்று அழகுற எழுதியிருக்கிறது. ஆக சாத்தான் கிழக்கு மேற்குமாய், வடக்கு தெற்குமாய் சுற்றி அலைந்திருக்கிறான் என்பது தெரிகிறது. எனவே உங்கள் பிள்ளைகள் (நீங்களுங்கூட) காரணமின்றி சுற்றி அலையக் கூடாது.

என் தூரத்து உறவிலே எனக்கொரு பாட்டி இருந்தார். அவர்களுக்கு இரண்டு கண்களுமே தெரியாது. இந்த முதிர்வயதில் கண் தெரியாத நிலையில் ஓரிடத்தில் ஒழுங்காக உட்காரமாட்டார்கள். தினமும் மாலையில் ஒரு குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் தன் தடியை எடுத்துக் கொண்டு டொக், டொக் என்று அடிமேல் அடி வைத்து தெருக்கோடியிலிருக்கிற ஒரு குறிப்பிட்ட

வீடு வரை போய் நின்று வேடிக்கை பார்த்துவிட்டு (மன்னிச்சுக்குங்க, கண் தெரியாதவர் எப்படி வேடிக்கை பார்த்தார் என்று கேட்காதீர்கள்) திரும்ப வீட்டிற்கு வந்துவிடுவார்கள். இரவிலே எங்களுக்கே அந்தப் பாதையில் நடப்பது சங்கடமாக இருக்கும். ஆனால் இவர்கள்மிகச் சரியாக நடப்பார்கள். இது எங்களுக்கு நீண்ட நாள் ஒரு புதிராக இருந்தது.

ஒரு முறை எங்களிடம் வந்த ஒரு தேவனுடைய மனுஷன் ஜெபித்தபொழுது அவர்களைக் குறித்து ஆவியில் ஏவப்பட்டு ஒரு வெளிப்பாடு சொன்னார். அவர் என்ன சொன்னார் தெரியுமா? சகோதரனே, இந்தப் பாட்டி சாதாரணமாக இருக்கும்போது வீட்டிலே முடங்கிக்கிடப்பார்கள். ஆனால் ஒரு அசுத்த ஆவி அவர்களுக்குள்ளே வரும்போது அவர்கள் திடீரென்று அங்கும் இங்கும் நடந்துபோய் வருவார்கள். அப்படித்தானே? என்று எங்களைக் கேட்டபொழுது மிகுந்த ஆச்சரியமாயிருந்தது.

ஆம், அது உண்மைதான். கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகரை சாத்தான் டேக்ஸியாக மாற்றி வருகிறான். இப்படிப்பட்டவர்கள் உட்கார்ந்து இருப்பார்கள். இந்த சாத்தான் வந்தவுடன் டேக்ஸியாக (Taxi) மாறி வாளாயிராமல் வலம் புரிய சென்று விடுவார்கள். சாத்தான் சுற்றியடித்து திரும்ப அவர்கள் வீட்டிற்கு கொண்டு வந்து விட்டு விட்டுப் போய்விடுவான். பாவம் இந்த வாடகைக்கார்கள். வாழ்க்கை வெறுத்து வறட்சியாய் உட்கார்ந்து விடுவார்கள்.

நான் அடிக்கடி சில வாலிபர்களை தேவையில்லாத நேரத்தில் தேவையில்லாத இடத்தில் பார்ப்பேன், அப்படிப்பட்டவர்களைப் பார்த்து எங்கே தம்பி போகிறாய் என்று கேட்டால் ஒன்றும் இல்லைங்க பாஸ்டர். சும்மா தான் போகிறேன் என்பார்கள். ஏம்பா வீட்டிலில்லாமல் சும்மா போகிறாய் என்று திருப்பிக் கேட்டால், சும்மா தான் ஒரு ரவுண்டு போகிறேன் என்பார்கள். சும்மா போவதும், ரவுண்டு அடிப்பதும் சாத்தானின் ஏவல், வாலிபனே கவனம் தேவை.



பெற்றோரே உங்கள் பிள்ளைகள் எங்கே போகிறார்கள் என்பதைக் குறித்து உங்களுக்கு கவனம் தேவை. ஏனெனில் இந்த உலகம் பொல்லாங்கன் கையில் விடப்பட்டிருக்கிறது.

இந்த உலகத்தில் உள்ள பள்ளிக்கூடமும், கல்லூரிகளும் பொல்லாங்கனால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. பள்ளிப் பாடத்திட்டங்களும், பழக்கவழக்கங்களும் பக்தியுள்ள பிள்ளைகளையே பாதாளத்திற்கு அழைத்துச் சென்றுவிடும் நிலை உள்ளபடியால் ஊர் சுற்றாதீர்கள். ஊர் சுற்ற விடாதீர்கள்.

யாக்கோபுக்கு பன்னிரெண்டு பிள்ளைகள். அவனுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை. அவள் பெயர் தீனாள். அவள் ஒரு நாள் தேசத்துப் பெண்களை சுற்றிப் பார்க்க போனாள். அங்கே சீகேம் அவளோடே இன்பமாய்ப் பேசினான். அவள் வாழ்வு கெட்டது. இதைக் கண்ட அவள் சகோதரர்கள் சதி செய்து சீகேமின் புத்திரரை கொலை செய்தார்கள். இதற்கு அடிப்படை காரணமென்ன? தீனாள் ஊர் சுற்றியதே. இதைக் குறித்த ஒரு பழமையான கிராமியப் பாடல் உண்டு.

தீனாளடி தீனாள் !
தெரு உலாவப் போனாள் !
சீகேமுக்குப் போனாள் !
சீரு கெட்டுப் போனாள் !

இந்த காரியத்தில் எனக்குள் ஒரு கேள்வி. தீனாள் வீட்டைவிட்டுப் புறப்படும்பொழுது யாக்கோபு இருந்திருப்பார். அவருடைய மனைவி இருந்திருப்பாள். அவளுடைய சித்திமார் இருந்திருப்பார்கள். இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இவர்கள் எல்லாம் அவள் புறப்படும் வரை சும்மாதானே இருந்தார்கள்.

அவள் மேக்கப் சற்று வித்தியாசமாக இருந்தது. அதை யாரும் கண்டு கொள்ளவில்லை. தேசத்துப் பெண்களைப் பார்க்க தனியாகப் புறப்பட்டு போனாள். அதிலும் யாரும் சிந்தை வைக்கவில்லை. ஆனால் அவள் காரியம் கெட்டுப் போன பின்பு பட்டயத்தைத் தூக்கிக் கொண்டு போனார்கள். அதைவிட அவள் புறப்படும் பொழுதே சாட்டையெடுத்து அடித்திருப்பார்களேயா னால் அந்தக் குடும்பம் எவ்வளவு கௌரவமாக இருந்திருக்கும் !

பெற்றோர்களே நன்றாய்க் கவனியுங்கள். உங்கள் பிள்ளைகளை வெளியே போகும்போது பிசாசு பிடிக்க வாய்ப்புண்டு. அவர்கள் தலைமேல் கைகளை வைத்து ஜெபித்து அனுப்புங்கள். எனக்குத் தெரிந்த தேவனுடைய மனுஷி ஒருவர் சொன்ன சாட்சி என்னை மிகவும் கவர்ந்தது. அவர்கள் தங்கள் வாலிபப் பிள்ளைகளை வெளியே அனுப்பும் போது ஜெபித்து அனுப்புவார்களாம். என்னவென்று தெரியுமா? நீங்கள் என்னுடைய பிள்ளைகளல்ல என்னுடைய பிள்ளைகளாயிருந்தால் பரவாயில்லை. உங்கள் விருப்பப்படி போய்வாருங்கள். நீங்கள் இயேசப்பாவின் பிள்ளைகள். எனவே அந்த நினைவோடு போய்வாருங்கள் என்பார்களாம். இந்த நாள் வரைக்கும் அவர்கள் கர்த்தருக்கும் மகிமையான சாட்சிகளாய் இருக்கிறார்கள், ஊர் சுற்றாதீர்கள். உங்கள் வாழ்வை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**2. காய்மகார சாத்தான் :**

யோபுவின் புஸ்தகம் முதல் அதிகாரம் 8-ஆம் வசனத்தில் தேவன் சத்தானைப் பார்த்து இரண்டாவது கேள்வியைக் கேட்கிறார். அடுத்த வசனத்தில் சாத்தான் கூறும் பதிலைப் பாருங்கள். "யோபு விருதாவாகவா.... பயந்து நடக்கிறான்?" அடுத்தவர் புகழ்ச்சியை விரும்பாதது சாத்தானின் ஆவி. அடுத்தவர் உயர்வைக் கண்டு நேரடியாகவோ சுற்றிவளைத்தோ



இடித்துரைப்பது சாத்தானின் ஆவி. தேவன் யோபைப் புகழுகிறார். "உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல் வேறு ஒருவனும் இல்லை".

இந்தப் புகழாரத்தை சாத்தானால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே சுயலாபக்காரன் என்ற பட்டத்தை யோபின் மேல் உள்ள பொறாமையால் பொரிந்து தள்ளுகிறான். சாத்தானின் இப்படிப்பட்ட ஆவி கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகரை தாக்குவதால் அவர்களும் தங்களுக்கு அடுத்தவரை காய்மகாரமாக நோக்குகின்றனர்.

அடுத்தவர்கள் புகழப்படும் பொழுது, உயர்த்தப்படும் பொழுது இப்படிப்பட்டவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. இவர்கள் எந்த நற்காரியத்தை எவர் செய்தாலும் அதிலே குற்றம் கண்டுபிடித்து இழிசொல் பேசுவார்கள்.

தாவீது கோலியாத்தை கொன்று விட்டு திரும்பி வரும் போது தேசத்துப் பெண்கள் சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடினார்களாம். அதைக் கேட்ட சவுல் அன்று முதல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான் என்று வேதம் சொல்லுகிறது.

உள்ளபடியே சவுல் இரண்டு காரியங்களைக் குறித்து அகமகிழ்ந்திருக்க வேண்டும். ஒன்று தனது தேசத்திலே இளையவனானவன் ஒருவனைக் கொண்டு கோலியாத்தை ஜெயித்து விட்டோம் என்று மகிழ்ந்திருக்க வேண்டும். இப்பேர்ப்பட்டவர்கள் என் படையில் உள்ளவர்கள் என்று உள்ளம் பூரித்திருக்க வேண்டும். மற்றொன்று யுத்தகளத்தையே எட்டிப்பார்க்காமல் வீட்டடியில் கிடந்த எனக்கு தேசத்துப் பெண்கள் ஆயிரம் மதிப்பெண்களாவது கொடுத்தார்கள் என்று மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால் இவனோ

தன்னுடையவர்களையே காய்மகாரமாய்ப் பார்த்தான்.

இன்றைக்கு அநேக ஊழியர்கள் தங்கள் உடன் ஊழியரோ சபை விசுவாசிகளோ சிறப்பாகப் பிரசங்கம் செய்து விட்டால் தாங்கிக் கொள்ள முடியவதில்லை. காரணம் காய்மகார ஆவி நாம் அப்படியிருக்கக் கூடாது. நாம் அடுத்தவரைப் புகழ வேண்டும். அடுத்தவரைப் பாராட்ட வேண்டும். நமது இனிய வார்த்தைகளால் உற்சாகப்படுத்த வேண்டும்.

தாவீது ஜெயம் பெற்றதற்குக் காரணம் அவன் பராக்கிரமசாலிகளை ஏராளமாய் தனது படையில் சவதரித்து வைத்துக் கொண்டான் (11 சாமு 23). அந்த பராமக்கிரசாலிகள் தாவீதைக் காட்டிலும் பெலசாலிகளாயிருந்தார்கள். அவர்கள் பெலத்தின் மீது தாவீது காய்மகாரம் கொள்ளாமல் அவர்களை தட்டிக் கொடுத்து உற்சாசப்படுத்தி வேலை வாங்கினான். அதனால் அவர்கள் உயிரைப் பணயம் வைத்து உழைத்தார்கள். எல்லா இடங்களிலும் தாவீது ஜெயம் பெற்றான். அவன் கீர்த்தி எங்கும் பரவிற்று. சவுல் காய்மகாரம் கொண்டான் அவன் வம்சம் ராஜபதவியை இழந்தது.

கர்த்தர் கொடுத்த எங்கள் தலைமைப் போதகருக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். தாவீதுக்கு இருந்த வெளிப்பாடு அவருக்கு இருக்கிறப்படியால் மகிழ்ச்சியடைகிறேன். தாவீது பலசாலிகளை பராக்கிரமசாலிகளை சேர்த்துக் கொண்டது போல இவரும் உழைக்கும் அழைக்கப்பட்ட ஊழியர்களைத் தம்மிடமாய் சேர்த்துக் கொண்டு உற்சாகப்படுத்தி உயர உதவி செய்கிறார். அதனால் தான் என் போன்றவர்கள் ஒரு ஸ்தாபனத்துக்குள்ளே இருந்து கொண்டு இப்பேர்ப்பட்ட எழுத்து ஊழியம் செய்ய முடிகிறது. சிறியவரையும் கனப்படுத்தி முன்னுக்குத் தள்ளும் திருமறைப் பெரியார் மறைதிரு யோபு ஞானப்பிரகாசம் ஐயா அவர்களைப் போல் இளைய தலைமுறையை வளர்க்கும்



தலைவர்களை கர்த்தர் எழுப்புவாராக.

காய்மகார ஆவி உடையோர் காய்ந்த சருகுகளாய் சிதறடிக்கப்படுவார்கள் என்பதற்கு சவுல் ஒரு சாட்சி எச்சரிக்கையாயிருங்கள். எவர் மேலும் எரிந்து விழாதீர்கள்.

### 3. கேள்வி கேட்கும் சாத்தான் :

யோபு 1 : 11–ல் சாத்தான் தேவனை நோக்கி எதிர் கேள்வி கேட்கிறான். அவருக்கு ஒரு சவால் விடுகிறான். யோபுவின் பக்தி பொய்யான பக்தி என்று குற்றம் சுமத்துகிறான் பாருங்கள். இவன் தேவனிடமே கேள்வி கேட்கிறான்.

இப்படி குற்றம் சொல்லுவதும் குறுக்குக் கேள்வி கேட்பதும் நூறு சதவிகிதம் பிசாசின் ஆவி.

தந்திரக்கார சாத்தான் தமது ஜனத்தின் ஐக்கியத்தைக் கெடுக்க குறுக்குக் கேள்விகளை கேட்கும் சுபாவத்தை விசுவாசிகளுக்கு வெகுமதியாகக் கொடுக்கிறான். திருமறையின் முதல் புஸ்தகத்தை திறந்து பாருங்கள். ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடம் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்று எதிர்கேள்வி கேட்கிறான். இந்த பூவுலகில் ‘கேள்வி கேட்கும்’ பழக்கத்திற்கு பிரதிஷ்டை ஆராதனை நடத்தினவன் இந்தப் பிசாசுதான். ஆகவே விசுவாசிகளே உங்கள் போதகரிடத்தில் குறுக்குக் கேள்வி கேட்காதீர்கள். பிள்ளைகளே உங்கள் பெற்றோரிடத்தில் குறுக்குக் கேள்வி கேட்காதீர்கள். அப்படிக்கேட்டால் உங்கள் ஆவியை கொஞ்சம் சோதித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு அநேக சபைகளில் விசுவாசிகள் போதகரை மடக்கோ மடக்கென்று கேள்விகேட்டு ஒடுக்கிவிடுகிறார்கள். அன்புள்ள விசுவாசியே அடக்கத்துடன் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். அழைக்கப்பட்ட ஊழியக்காரனுக்கு எதிராக கேள்வி கேட்க துணிகரம் கொள்ளாதே. மிஞ்சின

நீதிமானாயிராதே. உன்னை நீ ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் போதகரைக் குறித்து சரியாக நீங்கள் அறிந்திருக்க வேண்டும். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் கைவிட்டுவிட்டபடியால் கஷ்டம் தீர இந்த ஊழியத்திற்கு வந்தவரல்ல, உங்களைக் கண்காணிப்பதற்கு மேய்ப்பதற்கு, பரிசுத்த ஆவியானவரால், உங்கள் சபைக்கு ஊழியராய் நியமிக்கப்பட்டிருக்கிறார் (அப். 20 : 28). ஆகவே ஆடுகளே மேய்ப்பரை நேரடியாய் முட்டாதீர்கள் பின்னாலே திட்டாதீர்கள். மேய்ப்பன் தான் ஆடுகளை வழிநடத்த வேண்டுமே தவிர ஆடுகள் மேய்ப்பனுக்கு வழிகாட்டக் கூடாது. கமிட்டிகளும், குழுக்களும் நிர்வாகக் காரியங்களை கவனிக்கத்தானே தவிர சபையை நடத்துவதற்கு அல்ல. பந்தி விசாரிப்பிலும், ஆலய பராமரிப்பிலும் விசுவாசிகள் பங்கேற்கலாமே தவிர போதிக்கிற ஊழியத்திலிறங்கி குழப்பத்தை உண்டாக்காதீர்கள் (அப். 6 : 3,4).

சபைகளை ஆவியானவர் ஆளவேண்டுமே தவிர ஆட்களின் கூட்டம் ஆளக்கூடாது. கேள்வி கேட்பவர்களுக்கு ஒரு அன்பு ஆலோசனை. கேள்வி கேட்க ஆசையாயிருந்தால் தயவு செய்து சபையில் கேட்காதீர்கள். கொஞ்சம் பணம் செலவு செய்து தேர்தலில் ஜெயித்து சட்டசபைக்குப் போய் விடுங்கள். அங்கு யார் வேண்டுமானாலும் என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம். நமது சபை கிறிஸ்துவின் சரீரம். அதில் சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் இருக்க வேண்டும்.

நான் ஊழியர்களுக்காக ஒரு பக்கமாய்ப் பேசுகிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம். அவர்களிடத்தில் பலவீனங்கள் இருக்கலாம். அதைக் குற்றப்படுத்தாதீர்கள் என்று தான் சொல்லுகிறேன். மறைந்த போதகர் சுந்தரம் ஐயா அவர்களிடத்தில் நான் கற்றுக் கொண்ட பாடங்கள் அநேகம்.



ஒரு சில பேர்கள் அவரிடத்தில் வந்து மற்றவர்களைக் குறித்து படுபயங்கரமாகப் புகார் செய்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இவர் கொடுக்கும் பதிலே அலாதியானது தம்பி, நீங்க சொன்னதெல்லாம் கேட்டேன். அவர்மேல் உங்களுக்கு இவ்வளவு அக்கறை இருப்பதற்கு நன்றி நீங்கள் இந்தக் காரியத்தைக் குறித்து அவருக்கு எவ்வளவு நேரம் ஜெபித்தீர்கள் என்று நயமாகக் கேட்டார். குறைகூற வந்தவர் இந்தக் கேள்வியைக் கேட்டு விழி பிதுங்கி நிற்பார்.

தொடர்ந்து போதகர் சுந்தரம் ஐயா அவர்கள், “ஏய்யா அவருக்காக முழங்காலில் நிற்காத நீ குதிங்காலைத் தூக்கிட்டு வராதே” என்று நறுக்காகப் பதில் சொல்லி அனுப்பிவிடுவார். ஊழியரிடத்தில் பலவீனம் இருந்தால் ஜெபியுங்கள். தூற்றித் திரியாதீர்கள்.

குற்றம் சொல்லுபவரும், குறை காண்பவரும் வாழ்வில் நிறை காண்பதில்லை. தூற்றிக் திரிகிறவன் தன் கையைக் கொண்டு தன் கண்ணைக் குத்திக் கொள்ளுகிறவனுக்கு ஒப்பானவன். வேதத்தில் உள்ள ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

நோவா ஒரு நாள் குடிமயக்கத்தினால் வஸ்திரம் விலகி படுத்துக் கொண்டிருந்தானாம். அவ்விடத்தில் வந்த காம் தகப்பனின் நிர்வாணத்தைக் கண்டு தன் சகோதரருக்கு சொன்னானாம் (ஆதி 9 : 20-26). அவர்களோ பின்னாக நடந்து வந்து வஸ்திரத்தால் தன் தகப்பனை மூடினார்களாம். நோவா விழித்து எழுந்தபோது இச்செய்தியை அறிந்து தன் குமாரனாகிய காமை சபித்து மற்ற இருவரையும் ஆசீர்வதித்தாராம்.

இதில் பெரிய ஆவிக்குரிய படிப்பினை உண்டு. காமே தகப்பனின் நிர்வாணத்தை மூடியிருக்கலாம். ஆனால் தகப்பனின் நிலையை வெளியில் சொன்னான். ஆனால்

ஆவிக்குரிய மற்றவர்களோ தகப்பன் நிர்வாணத்தை காணாமல் மூடினார்கள், ஆசீர்வதித்தான். காமை மகன் என்று பாராமலும் சபித்தான்.

**தூற்றித்திரியும் காமே, குற்றப்படுத்தும் காமே, குறுக்குக் கேள்வி கேட்கும் காமே, தகப்பனிடமிருந்து ஆசீர் வாங்கவேண்டிய நீ சாபத்தை வாங்கிக்கொள்ளாதே. பிசாசின் ஆவிக்கு இடங்கொடுக்காதே. உன்னைக் கொண்டு ஒரு விபரீதத்தை உருவாக்க பிசாசுக்கு உடன்படாதே. எவன்நிமித்தம் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ என்ற வேத வசனத்தை மனதில் கொண்டு நல புலம் ஒன்றும் சொல்லாமல், கர்த்தருக்குக் காத்திரு.**

ஞானியின் கண்கள் அவன் முகத்தில் இருக்கிறது என்று பிரசங்கி 2 : 14-இல் வாசிக்கிறோம். அதன் அர்த்தம் என்னவென்றால் ஞானவான் எவனும் தன்னுடைய காரியங்களையே உற்று நோக்கிப் பார்க்கிறான் என்பதே. நீங்கள் உங்களைப் பாராமல் உங்களுக்கு அடுத்தவர் குறைகளை காணும்படி கண்களை திறப்பீர்களானால் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒருபடி விழுந்துவிட்டீர்கள் என்பது மிகவும் நிச்சயம்.

இப்படிப்பட்ட கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். ஞானமற்றவர்களைப் போல் நடவாமல் ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானபடியால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். (எபேசி 5 : 11,15,16).

**4. அழிவைக் கொண்டு வரும் சாத்தான் :**

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தைக்



கொடுக்கிறார். ஆனால் பிசாசோ அந்த ஆசீர்வாதங்களைக் கெடுத்துப்போடுகிறான். (திருடிக் கொள்கிறான்). யோபுவின் புஸ்தகம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள். சாத்தான் முதலாவது வேதனையைத் தருகிறான். இரண்டாவது வியாதியைத் தருகிறான். மூன்றாவது வேலிகளை உடைக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளே, நம்முடைய வாழ்வில் வரும் வேதனைக்கும், சோதனைக்கும் முதன்மை காரணம் இந்தப் பொல்லாத சாத்தானே என்பதை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

அநேக சமயங்களில் நம்முடைய நெருக்கங்களில் கர்த்தர்தான் நம்மை இப்படி சோதிக்கிறார் என்று நினைத்து அவரைக் குறித்து முறுமுறுக்கிறோம். இதைக் குறித்து சரியான ஆவிக்குரிய அறிவு நமக்கு இருத்தல் அவசியம். தேவன் சோதிப்பது உண்மை. கர்த்தர் நீதிமானை சோதித்து அறிகிறார் என்றும், சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்றும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க எல்லா சோதனைக்கும் தேவன் தான் காரணரா? என்றால் நிச்சயமாக இல்லை என்று பதில் சொல்வேன். உங்கள் குழந்தை மரிப்பதும், உங்களுக்கு விபத்து ஏற்படுவதும், உங்கள் வியாபாரம் நஷ்டமாவதும் தேவன் அனுப்பி வைத்த சோதனைகளல்ல. இப்படி உங்களை துன்புறுத்தி சோதிக்க அவர் கல்நெஞ்சக்காரரல்ல.

“சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல” (யாக்கோபு 1 : 15).

தேவன் நம்மை பொல்லாங்கினால் சோதிக்கிறவர் அல்ல என்று மேற்கூறிய வசனம் மிகத்தெளிவாக சொல்கிறது. எனவே

பொல்லாங்கனாகிய பிசாசே நஷ்டங்களை நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வருகிறான்.

நம்முடைய வியாதிக்குக் காரணம் பிசாசு. நம்முடைய வியாபார நஷ்டத்திற்குக் காரணம் பிசாசு. நமது குடும்பத்தில் ஏற்படும் அகால மரணத்திற்கு காரணம் பிசாசு. எனவே சோதனையும் மூலக்காரணமும் யார் என்பதை முதலில் கண்டுபிடியுங்கள். சோதனையும் அதோடுகூட சோதனைக்குத் தப்பும் போக்கும் (1 கொரி 10 : 13) சேர்ந்தே வந்தால் அது தேவனால் வந்தது. மாறாக சோதனையும் அழிவும் சேர்ந்தே வந்தால் அது சாத்தானால் அனுப்பப்பட்ட வேதனையான சோதனை என்பதை அறிந்து அவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

சாத்தான், "தேவன் எப்படி கிரியை செய்கிறாரோ அதைப்போலவே அவனும் கிரியை செய்கிறான்" தேவன் தமது பிள்ளைகளுக்கு உதவ தமது தூதர்களையும், தன்னுடைய ஆவியின் ஏவுதலுக்கு கீழ்ப்படியும் மனிதர்களையும் எழுப்புவதுபோல பிசாசும் தேவனுடைய மக்களை வதைக்க தனது தூதர்களையும், தன்னுடைய ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்களையும் எழுப்புகிறான். இதற்கு அபிஷேகம் பண்ணப்பட்ட விசுவாசிகளும் விதிவிலக்கானவர்களல்ல. பிசாசானவன் தன்னுடைய காரியத்தை சாதிக்க எவரையும் வசப்படுத்திக் கொள்ளும் தன்மையுள்ளவன்.

கர்த்தருடைய தாசனாகிய தாவீதைக் குறித்து சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி "இஸ்ரவேலரைத் தொகையிடுவதற்கு தாவீதை ஏவி விட்டது" (1 நாளா 21 : 1) என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோபு 2 : 3-இல் சாத்தான் தன்னை ஏவினதாகக் கர்த்தரே சொல்கிறார். கர்த்தரையும், கர்த்தருடைய ஆவியைப் பெற்ற தாவீதையும் சாத்தான் ஏவுவானானால் அவன் நம்மை ஏவுவதற்கும் ஏமாற்றுவதற்கும் எத்தனை சுலபம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.



கடைசிக்கால சபையையும், பரிசுத்தவான்களையும் ஒரு வழி பார்த்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் சாத்தான் வேலியை உடைக்க, வியாதியைக் கொடுக்க வேதனையை அனுப்ப தீவிரப்படுகிறான். இக்காரியங்களை நிறைவேற்ற சிலபரிசுத்தவான்களை தேடிக் கொண்டிருக்கிறான். (கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பான் என்று அவனைக் குறித்து எழுதியிருக்கிறது) இந்தச் சாத்தானின் கனமான ஊழியத்திற்கு தயவு செய்து யாரும் போய்விடாதீர்கள்.

சாத்தான் வேலியை உடைப்பவன், வேதனையைத் தருபவன். இந்த ஆவி ஒருவரை தாக்கும்போது அவர், அவன் ஏஜென்டாக மாறி கிரியை செய்ய ஆரம்பிப்பார். அதனுடைய விளைவுதான் ஊழியர்களுக்குள்ளே அடிதடி சண்டை. விசுவாசிகளாலே, ஊழியர்களாலே, உபத்திரவம்.

இப்படிப்பட்ட ஆவி விசுவாசிகளைத் தாக்கும்போது சபைகளுக்குள்ளே விபரீதங்கள் ஏற்படுகிறது. சபையின் வேலிகளை உடைக்க சபையின் ஆத்துமாக்களை சிதறடிக்க யாரைப் பிடித்தால் நடக்கும் என்பது சாத்தானுக்குத் தெளிவாகத் தெரியும். அவன் சாதாரண விசுவாசிகளைத் தொடாமல் சபையின் முன்னணிக் கூட்டத்தாரையும், போதகரால் உபயோகப்படுத்தப்படுபவரையும் கவர்ந்து தனது காரியத்தை நிறைவேற்ற அவர்களை இவன் உபயோகப்படுத்துகிறான்.

அதனால்தான் சபையில் தங்கள் ஸ்தானம் எதுவென்று உணராமல் ஊழியருக்கு விரோதமாய் கூட்டங்கூடுவதும், மொட்டைக் கடுதாசி, பேரில்லா தொலைபேசிகள் ஆகியவற்றை அனுப்புவதும் இவர்கள் வாடிக்கையாய் மாறுகிறது. அப்போஸ்தலர் காலத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு சிலராலேதான் ஊழியர்களுக்கு இடறல் உண்டாயிற்று.

அப்படியே இப்பொழுது சாத்தான் விசுவாசிகளை வைத்தே விபரீதங்களை கொண்டு வருகிறான்.

சாத்தான் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ஏவமுடியுமா? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பலாம். வேதம் முடியும் என்றே சொல்லுகிறது. மத்தேயு 16 : 22,23 வசனங்களில் பேதுருவைப் பார்த்து ஆண்டவர் "எனக்குப் பின்னாகப் போ சாத்தானே. நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்" என்று கடிந்து கொள்ளுகிறார். அதே அதிகாரம் 16 : 17 வசனங்களில் இயேசு அவனை நோக்கி.... "மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று இயேசுவே சொல்லுகிறார். ஒருபுறம் ஆவியானவரின் வெளிப்படுத்தல். இன்னொருபுறம் சாத்தானின் ஏவுதல், பேதுருவுக்கே இந்த நிலை என்றால் நமது நிலையை யோசித்துப் பாருங்கள்.

அப்போஸ்தலர் காலத்தில் அனனியா பேதுருவினிடத்தில் வந்து பொய் சொல்லும்போது பேதுரு அனனியாவைப் பார்த்து "...... பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" (அப். 5 : 3) என்று சொல்லுகிறார். இதிலிருந்து பிசாசானவன் விசுவாசிகளின் இருதயத்தை நிரப்ப முடியும் என்று தெரிகிறதல்லவா!

11 தீமோ 2 : 26-இல் பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிப்பட்டிருக்கிற அவர்கள் (எதிர் பேசுகிறவர்கள்) மறுபடியும் மயக்கம் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.

இந்த வசனத்தில் எதிர் பேசுகிறவர்கள் சாத்தானிடத்தில் பிடிபட்டு மயக்கமாயிருக்கிறார்கள் என்று எத்தனை தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா? எனவே தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் அழைக்கப்பட்டவர்களையும் தந்திரமாய் வஞ்சித்து, ஏவி தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள சாத்தானால் கூடும் என்பதை உணர்ந்து



கொள்ளுங்கள்.

அன்பானவர்களே! எண்ண வேண்டியதற்கு மிஞ்சி நீங்கள் எண்ண வேண்டாம். ஆவியானவருக்கும், வேத வசனத்திற்கும், அழைக்கப்பட்ட ஊழியக்காரருக்கும் கீழ்ப்படிந்து உங்கள் அழைப்பிலே உறுதியாயிருங்கள், சபையை உடைப்பதும் ஸ்டே ஆர்டர் வாங்குவதும் பக்தி வைராக்கியத்தினால் உண்டானதல்ல. அது அழிவை உண்டாக்கும் சாத்தானின் ஆவியினால் உண்டானது. இதை வாசிக்கும் பொழுது உங்களை கொஞ்சம் ஆராய்ச்சி செய்யுங்கள். உங்கள் நிமித்தம் கர்த்தருடைய பிள்ளைகள் எவரேனும் எந்த விதத்திலாவது பாதிக்கப்பட்டிருப்பார்களாகில் நீங்கள் உடனே அறிக்கையிட்டு மனந்திரும்பி ஒப்புரவாகுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

கடினப்படுத்துவீர்களாகில் பல முறை எச்சரிக்கப்பட்டும் விலக மனதில்லாமல் வீழ்ந்துபோன யூதாஸின் நிலைமையை அடையலாம் (அவனுக்குள் சாத்தான் புகுந்தது உங்களுக்குத் தெரிந்ததே). அவன் அடையாளம் அற்புதங்களை மற்றவர்போல் செய்தாலும், இயேசுவுக்கு நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தாலும், அழைக்கப்பட்ட அப்போஸ்தலனாக இருந்தாலும், மனந்திரும்பாமல் மனதை கடினப்படுத்தினதினால் அவன் அநியாயமாய் மரித்தான்.

தேவன் அழைத்த அழைப்பும், கிருபை வரங்களும் மாறாதவைகள் மாறாதவைகள் தான். அந்த எண்ணத்திலேயே மனமேட்டிமையாய் இருந்து மனந்திரும்பாமல் போனால் நீங்கள் இம்மட்டும் சேவை செய்த சாத்தானோடுதான் நித்தியத்திலிருக்க வேண்டியது. கவனமாயிருங்கள்!

# 4

# யோபுவின் பிள்ளைகள் !

யோபுவின் பிள்ளைகளைக் குறித்து யோபு 1 : 2-ல் வாசிக்கிறோம். அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். இந்த ஏழு குமாரர்களுடைய பெயர்கள் வேத புத்தகத்தில் எங்கும் குறிப்பிடப்படாவிட்டாலும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு மிக நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு அவர்கள் பெயர்களை கண்டுபிடித்துள்ளேன். முதலாவது மகன் Mr.Monday இரண்டாவது மகன் Mr. Tuesday.... ஏழாவது மகன் பெயர் Mr. Sunday (மன்னித்துக் கொள்ளுங்கள்), உங்கள் ஞாபகத்திற்காக அப்படி எழுதியிருக்கிறேன்.

யோபு 1 : 4-ல் "அவன் குமாரர் அவனவன் தன் தன் நாளிலே விருந்து செய்து தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள்" இந்த வார்த்தையைப் பார்த்தீர்களா? எவ்வளவு நெருக்கமான குடும்ப ஐக்கியம்! ஆண் மக்கள் தங்கள் நாளிலே விருந்து கொடுத்தார்களாம். பெண் மக்கள் விருந்து புசித்தார்கள் (விருந்து கொடுக்கவில்லை).

தன்தன் நாளிலே என்பது வாரத்திற்கு ஒரு முறையா அல்லது மாதத்திற்கு ஒரு முறையா என்பதை சரியாகக் கணிக்க முடியாவிட்டாலும் அவர்கள் கிரமமாக வரிசைப்படி விருந்து வைத்தார்கள் என்பது உண்மை. இந்தத் தாசனாகிய யோபுவினுடைய குமாரரும், குமாரத்திகளும் சகோதர அன்பில் பலமாய் கட்டப்பட்டிருந்தார்கள் என்பது உண்மை.

இன்றைக்கு அனேக கிறிஸ்தவ குடும்பங்களில் அண்ணன் வீட்டிற்குத் தங்கைகள் வருவதில்லை. அப்படி அவர்கள் வந்தாலும் அண்ணனும் அண்ணியும் உபசரிப்பதில்லை. யோபுவின் புத்தகத்தில் அண்ணன் தம்பி சண்டையும், தங்கைக்கும் அண்ணிக்கும் இடையிலான



சண்டையும் இல்லாதிருப்பது எத்தனை மகிழ்ச்சியான காரியம்.

யோபுவின் குமாரத்திகள் உயிரோடிருந்த நாட்களெல்லாம் சகோதரர்கள் வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டு சந்தோஷமாய் இருந்திருக்கிறார்கள். 1 தீமோ 5 : 8-ஆம் வசனத்தில் "ஒருவன் தன்சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால்........ அவன் கெட்டவனுமாயிருப்பான்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு அநேக ஆவிக்குரியவர்கள் தங்களுடைய இரட்சிக்கப்படாத உடன்பிறப்புகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யத் தவறி விடுகின்றனர். வேதம் நமக்கு அப்படிப் போதிக்கவில்லை. குணப்படாத நம்முடைய உடன்பிறப்புகளைத்தான் நாம் அதிகமாக நேசிக்க வேண்டும். முதலாவது, அவர்களை நேசிக்க வேண்டும். இரண்டாவது, கிறிஸ்துவின் அன்பு உங்களிலிருப்பதால் அவர்கள் இரட்சிப்பை பெறும்படிக்கு அவர்களை நேசிக்க வேண்டும்.

அவிசுவாசிகளை விட்டு பிரிந்திருக்கும்படிதான் வேதம் சொல்கிறதே தவிர இரட்சிக்கப்படாத சகோதர சகோதரிகளுக்கு உதவி செய்யக்கூடாது என்று வேதம் சொல்லவில்லை. தேவன் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துவதற்காகத்தான் சகோதர சகோதரிகளை தேவன் தந்துள்ளார். தூரத்திலுள்ள சகோதர சகோதரிகளுக்கு ஒரு ஐம்பது பைசா அஞ்சல் அட்டையிலாகிலும் சுக நலத்தை விசாரியுங்கள். சொந்த சகோதரர்களை விசாரிக்க முடியாதவர்கள், ஆவிக்குரிய சகோதரர்களையும் உண்மையாய் நேசிக்க மாட்டார்கள் என்பது உறுதி.

யோபுவின் பிள்ளைகள் தங்கள் சகோதரிகளுக்கு விருந்து கொடுத்து உபசரித்துக் காப்பாற்றினார்கள். நீங்களும் அப்படியே உங்கள் மாம்ச உறவுகளுக்கு செய்யுங்கள். கர்த்தர் உங்களில் பிரியப்படுவார். உங்கள் பிள்ளைகளும் உங்கள் முன்மாதிரியைப் பின்பற்றி அவர்களுக்குள்ளே ஐக்கியமாயிருப்பார்கள்.

## 5

# சோதனை ஆயுதங்கள் !

தாசனாகிய யோபுவை சோதிக்கும்படி சாத்தான் ஆறு விதமான ஆயுதங்களை பயன்படுத்தி இருக்கிறான் என்று யோபுவின் புத்தகம், முதல் இரண்டு அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளது. முதல் அதிகாரம் 15-ஆம் வசனத்தில் சபேயர் வந்து ஆடுமாடுகளை கொள்ளையடித்து சென்றார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

**1. சபேயர் :**

தென் அரேபியாவிலுள்ள ஒரு பகுதிக்கு சேபா என்று பெயர். அங்கிருந்து வந்த வியாபாரிகளுக்கு சபேயர் என்று பெயர். அவர்கள் கள்ளரும் அடிமை வியாபாரிகளுமாய் இருந்தார்கள். இதைக் குறித்து யோவேல் 3 : 8-இல் கூட இவர்கள் விற்பனையைக் குறித்து ஒரு குறிப்பு வருகிறது. இந்த சேபா நாட்டு ராஜஸ்திரீதான் ராஜாவாகிய சாலொமோனை சந்திக்க வந்தாள் என்று இராஜாக்களின் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளை கலங்க வைக்க, அவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி நலிவடையச் செய்ய இப்பேர்ப்பட்ட கொள்ளையர்களை நம்மிடத்தில் சாத்தான் அனுப்பி வைக்கிறான். நம்முடைய குடும்பத்தில் ஏற்படுகிற களவுகளுக்கும் இழப்புகளுக்கும் காரணம் இந்தச்சாத்தானே.

கர்த்தருடைய பிள்ளைகளே, நீங்கள் எதிர்பாராத விதத்தில் உங்கள் பொருட்களை இழக்கக் கொடுத்திருக்கலாம். உங்கள் சொத்துக்களை பலர் அபகரித்திருக்கலாம். கவலைப்படாதிருங்கள். உங்களுடையதை ஒருவனும்



வைத்திருக்க முடியாது. யோபுவினுடையதை சபேயர் அபகரித்தாலும், அவன் தன் ஜீவ நாட்களில் அவைகளை திரும்ப இரட்டத்தனையாய் பெற்றுக் கொண்டான்.

தாவீது ராஜா மிகவும் நெருக்கப்பட்ட அச்சமயத்தில் அமலேக்கியர் தாவீதின் குடும்பத்தினரை கொள்ளையிட்டு சென்றனர். தாவீது எல்லாவற்றையும் இழந்தான். வேதம் அதோடு நிறுத்தவில்லை. 1 சாமு 30 : 19-இல் "ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்" என்று எழுதியிருக்கிறது. அதைப்போலவே தன் சகோதரனாகிய லோத்து, அவன் குடும்பம் சிறைபிடிக்கப்பட்டுப் போனதை ஆபிரகாம் கேள்விபட்டபோது பின்தொடர்ந்து எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டு வந்தான் என்று ஆதி 14 : 16-இல் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே, சபேயர் என்னும் கொள்ளைக்கூட்டம் உங்களைத் தாக்கினதால் இழந்து தனித்து தவித்திருக்கலாம். தூர தேசத்தில் உள்ள இவர்களைப் போன்றவர்களால் உங்கள் உள்ளம் உடைந்திருக்கலாம். கவலைப்படாதீர்கள். யோபுவுக்கும் ஆபிரகாமுக்கும், தாவீதுக்கும் ஒன்றும் குறைவுபடாமல் திருப்பிக் கொடுத்தவர் உங்களுக்கு திருப்பிக் கொடுப்பார்.

**2. அக்கினி :**

யோபு 1 : 16-இல் வானத்திலிருந்து அக்கினி விழுந்து ஆடுகளையும், வேலையாட்களையும் சுட்டெரித்தது என்று வேலைக்காரன் வந்து சொல்லுகிறான். வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி வந்ததென்று வேலைக்காரன் சொன்னாலும் வானத்திலிருந்து வருவதெல்லாம் தேவ அக்கினி அல்ல. வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை கர்த்தருடைய ஜனத்திற்கு நஷ்டத்தை உண்டுபண்ணும்படி தீ விபத்துக்களை கொண்டு வருகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளின் செல்வங்களை அழிக்க, அவர்கள் ஊழியத்தை உருக்குலைக்க இந்த நெருப்பை சத்துரு பயன்படுத்துகிறான். ஆகிலும் கர்த்தருடைய பிள்ளைகளே நீங்கள் பயப்படவேண்டிய அவசியமில்லை, உங்கள் குடும்பத்தில் தீ விபத்தில் பல நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தாலும் கலங்க வேண்டாம். உங்களுடையதை அக்கினி வைத்திருக்க முடியாது. அது திரும்ப அவைகளை உங்களிடத்தில் கொடுக்கும். நீங்கள் இழந்ததைப்போல் இருமடங்கு பெறுவீர்கள். இதை விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

சென்னையிலே ஒரு சபையார் தென்னங்கீற்றினாலே கூரை வேய்ந்து கர்த்தரை ஆராதித்து வந்தார்கள். ஊழியத்தை உருக்குலைக்க, சாத்தான் ஒரு சிலரை எழுப்பவே அந்தக் கூடாரம் ஒரு இரவில் எரிந்து சாம்பலாயிற்று. சபைப்பாகுபாடின்றி எல்லோருமே அதிர்ந்து போனார்கள்; அழுது ஜெபித்தார்கள். அக்கினி அந்தக் கூடாரத்தை அழித்தாலும் ஆண்டவர் அதை ஆயிரம் மடங்காய் திருப்பிக் கொடுத்தார். ஆம் ஆயிரம் மடங்குதான். அதே இடத்தில் சகல நவீன வசதிகளோடு கூட மிகப்பெரிய ஜெபவீடு இன்று கெம்பீரமாய் நிற்கிறது. அங்கு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் மூன்று ஆராதனைக்கு மேல் நடைபெறுகிறது.

"அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடிதனில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர் நல்லவர் – அவர்
கிருபை என்றுமுள்ளதே"

என்று பாடிப் பரமனைப் போற்றித் துதியுங்கள். திரும்பப் பெறுவீர்கள். திருப்தியடைவீர்கள்!

**3. கல்தேயர் :**

யோபு 1 : 17–இல் கல்தேயர் வந்து ஒட்டகங்களை ஓட்டிச் சென்றார்கள் என்று வாசிக்கிறோம். பாபிலோனியாவின் தென்கிழக்குப் பக்கத்தில் இருந்தவர்களுக்கு கல்தேயர் என்று பெயர். பிற்காலத்தில் முழு பாபிலோனியருக்குமே கல்தேயர் என்ற பெயர் வழங்கலாயிற்று.



கல்தேயர் தேவனுடைய பிள்ளைகளின் ஆசீர்வாதங்களை அபகரிக்கும் குணமுள்ளவர்கள். பிற்காலத்தில் அதே கல்தேயத்தில் (பாபிலோனில்) இருந்து எழும்பின நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்தைக் கொள்ளையிட்டான் என்பதை நினைவு கூறுவது நல்லது.

கர்த்தருடைய பிள்ளைகள் ஆசீர்வாதத்தோடு விளங்கும் நாட்களில் அவர்கள் மேல் போர்தொடுத்து, நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருட்சேதங்களை சத்துரு உண்டாக்குகிறான். எதிர்பாராத விபத்துக்கள், மருத்துவச் செலவுகள் இப்படிப் பல காரியங்களால் நம்மை நலிவடையச் செய்ய சத்துரு ஆட்களை எழுப்புகிறான். ஆகிலும் கர்த்தருடைய பிள்ளைகளே, நீங்கள் கவலைப்படாதீர்கள். கல்தேயர் உங்களுடையதை மறைத்திருக்க முடியாது. நீங்கள் அதைத் திரும்பப் பெறுவீர்கள்.

ஒரு ஊழியர் வீட்டில் வாழை மரத்தில் குலை தள்ளியிருந்ததாம். இன்னும் ஒரு நாளில் அதை அறுக்க வேண்டிய சூழ்நிலையில் குடும்பத்தோடு வெளியே புறப்பட வேண்டிய நிலை வந்ததாம். போகும்போது ஜெபித்துவிட்டு "தேவதூதா நான் திரும்ப வர்றவரைக்கும் இந்த வாழைக் குலையை பத்திரமாய் பார்த்துக்க" என்று கட்டளை கொடுத்துவிட்டுப் போய்விட்டாராம்.

திரும்ப வந்து பார்த்தவருக்கு ஒரே ஆச்சரியம். மரத்தில் குலையை காணவில்லை. கோபத்தில் தேவதூதனைப் பற்றி ஆண்டவரிடத்தில் புகார் செய்துவிட்டு இரவு தூங்கிவிட்டார்.

காலையில் ஒரு மனிதன் வந்து, “ஐயா உங்க வீட்டு வாழைக்குலையை நான்தான் அறுத்துட்டுப் போனேன். இராத்திரியெல்லாம் தூக்கத்தில் தேவ தூதன் மிரட்டுகிறான். இந்தாங்க உங்க வாழைக் குலை” என்று கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டான்.

பிரியமானவர்களே, கல்தேயன் கவர்ந்ததை கர்த்தர் யோபுவுக்கு திருப்பிக் கொடுத்ததுபோல் நீ இழந்தவைகளை தேவன் திருப்பிக் கொடுப்பார் கர்த்தருக்குக் காத்திரு; கர்த்தருக்கே காத்திரு!

**4. பெருங்காற்று :**

யோபு 1 : 18-இல் வனாந்தர வழியாய் வந்த பெருங்காற்று அந்த வீட்டின் நாலு மூலைகளிலும் அடிக்க வீடு விழுந்தது என்று வாசிக்கிறோம். இயற்கையில் தேவன் காற்றைத் தமது பண்டக சாலையில் வைத்திருக்கிறார். அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட திசையும் வைத்திருக்கிறார். கிழக்கிலிருந்து வீசும் காற்று கீழ்க் காற்று என்றும், தெற்கிலிருந்து வரும் காற்று தென்றல் காற்று என்றும், வடக்கேயிருந்து வரும் காற்று வாடைக் காற்று எனவும், மேற்கேயிருந்து வரும் காற்று மேல் காற்று எனவும் வழங்கப்படுகிறது.

காற்றுகளை தேவன் தமது கரத்தில் எடுத்து பயன்படுத்துகிறார். கர்த்தர் காற்றின் செட்டைகளில் செல்கிறார் என்று சங்கீதம் 104 : 3-இலும், தமது ஊழியக்காரரை காற்றுகளாக மாற்றுகிறார் என்று சங் 104 : 4இலும், அவர் சொற்படி செய்யும் பெருங்காற்று என்று சங். 148 : 8-இலும், பெருங்காற்றைப் போல தமது இரதங்களில் வருவார் என்று ஏசாயா 66 : 15-இலும், காற்றை சிருஷ்டித்தவர் என்று ஆமோஸ் 5 : 13-இலும் வாசிக்கிறோம்.

இப்படி தேவனுடைய பண்டசாலையில் இருக்கும் இந்தக்



காற்றையே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக சத்துரு பயன்படுத்துகிறான். ஆகிலும் காற்று உங்களை கலங்கச் செய்ய முடியாது. உங்கள் வாழ்க்கைக் கப்பல் உடையும்படி சத்துரு காற்றை அனுப்பலாம். ஆகிலும் கர்த்தர் உங்களோடு இருக்கிறபடியால் (மத். 14 : 32, மாற். 6 : 51) காற்று அமைதலாயிருக்கும். கப்பல் கரை போய்ச் சேரும்.

நிகழ்கால சோதனைகளால் வேதனைப்படாதீர்கள். சோதனைகளை சாதனையாக மாற்றிக் கொள்ள கர்த்தர் உங்களுக்கு கிருபை செய்வார்.

யோபுவுக்கு புயலினால் மக்கட்சேதம் வந்தது உண்மை. ஆகிலும் தேவன் அதே எண்ணிக்கையைத் திரும்பக் கொடுத்தார். புயலினால் உங்களுக்கு நஷ்டங்கள் வரலாம். கவலைப்படாதீர்கள். கர்த்தருக்குள் திடமனதாயும் உண்மையுமாயிருங்கள். கர்த்தர் புயலுக்குப் பின்னே புதிய ஆசீர்வாதத்தை உங்களுக்குத் தருவார்.

**5. வியாதி :**

கர்த்தருடைய பிள்ளைகளை கலங்கப்பண்ண வியாதியை சத்துரு கொண்டு வருகிறான் என்று யோபு 2 : 7-இல் வாசிக்கிறோம். யோபுவுக்கு இருந்த வியாதி இன்னதென்று சரியானபடி கூற முடியாவிட்டாலும், அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அந்த வியாதி பிடித்திருந்தது என்றும், ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக்கொள்ளும் அளவு கொடிய பருக்கள் அவனிலிருந்தது என்றும் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளின் வியாதிக்குக் காரணம் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் பிசாசுதான் என்பதை தெளிவாக அறிந்து கொள்கிறோம். 1 கொரி 11 : 30-இல் அபாத்திரமாய் திருவிருந்தில் பங்கு கொள்கிறவர்கள்

வியாதிக்குள்ளாகிறார்கள் என்று வாசிக்கிறோம். இந்த ஒரு சதம் கர்த்தரால் அனுப்பப்படுகிறது என்றாலும் அதற்கு மூலகாரணம் பாவமாயிருக்கிறபடியால் பிசாசின் கிரியைகளினாலேயே வியாதி வருகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நான் ஒரு புத்தகத்தில் வாசித்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1904 ஆம் வருஷம் ஆஸ்திரேலியாவில் பாஸ்டர். அலெக்சாண்டர் டோவி என்பவர் ஊழியம் செய்து வந்தார். அந்நாட்களில் அப்பகுதியில் பிளேக் என்னும் தொற்று நோய் பரவி அவருடைய சபை விசுவாசிகள் பலர் மரித்துப் போயினர். உண்மை விசுவாசிகளுக்கு இப்பேர்ப்பட்ட மரணம் வருவதைக் கண்டு கலங்கின இப்போதகர் ப்ளேக் வியாதியினால் படுக்கையிலிருக்கும் ஒரு வாலிபப் பெண்ணையும் அவள் சகோதரனையும் கண்டு ஜெபிக்கச் சென்றார்.

அந்த வியாதியில் படுத்திருந்த பெண், வாயில் நுரைதள்ளி முகம் கறுத்து மரணத்திற்கு சமீபமாய் காணப்பட்டாள். பாஸ்டர் டோவி அவர்கள் ஆவியிலே வைராக்கியங் கொண்டு "இயேசுவின் நாமத்திலே இந்தப் பெண்ணைவிட்டு வெளியே வா பிசாசே" என்று அதட்டினார். உடனே அவள் முகத்திலிருந்த கருமை மாறியது. நுரை நின்றது. பரிபூரண சுகம் அடைந்தாள். பின்னர் அவள் சகோதரனுக்கும் போதகர் அப்படியே ஜெபித்தார் அவரும் பரிபூரண சுகம் பெற்றார். அப்பொழுது மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தான் (எபி 2 : 14) அவ்வீட்டைவிட்டு அகன்று சென்றான். இதிலிருந்து இக்கொடிய நோய்க்கு மூல காரணம் பிசாசு என்று தெரிகிறதல்லவா?

நாங்கள் இருக்கிற ஈரோட்டுக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு நல்ல விசுவாச சகோதரன் இருக்கிறார். அவருக்கு திடீரென்று கழுத்துவலி ஏற்பட்டு எந்தப்பக்கமும் திருப்ப முடியாமல் மிகவும் வேதனைப்பட்டார். ஏராளமான வைத்தியம் செய்தும் பலனில்லாததால் ஜெபந்தான் விடிவு என்று ஜெபத்திலே காரியத்தை வைத்தார்.



அன்றிரவில் தானே சில பிசாசுகள் நேர்முகமாய் தோன்றி ஏளனமாய் சிரித்ததாம். இதைக் கண்ட இவர் அடுத்த நாள் மிக வைராக்கியமாய் ஜெபித்தாராம். அடுத்த நாள் அதே பிசாசின் கூட்டம் இவரிடம் பேசியது. உடனே இவர் ஆவியிலே வைராக்கியங்கொண்டு இயேசுவின் நாமத்திலே என்னைவிட்டுப் போ பிசாசே என்ற உடனே பிசாசுகள் அவ்விடத்தை விட்டு ஓடிப்போயிற்று. அதேசமயத்தில் மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால் இவர் கழுத்து வலி முற்றிலும் அகன்று போயிற்று. இத்தனை நாட்கள் அவரைக் கட்டி வைத்தது சாத்தான் என்பது புரிகிறதல்லவா?

வேதத்தில் பதினெட்டு வருஷம் ஒரு பெண்ணை கூனியாக்கி வைத்திருந்தது அசுத்த ஆவிதானே இயேசுவும் பலரை குணமாக்கும் பொழுது செவிட்டு ஆவியே, குருட்டு ஆவியே, ஊமையான ஆவியே என்று பிசாசைக் கடிந்தார். மக்கள் சுகம் பெற்றார்கள்.

யோபுவுக்கு வியாதி வந்ததற்குக் காரணம் என்னவென்று பலர் பல காரியங்களைச் சொன்னாலும், யோபு 3 : 25-இல் நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. நான் அஞ்சினது எனக்கு வந்தது என்று யோபே சொல்லுகிறான். அவனுடைய பயந்தான் அவன் வியாதிக்குக் காரணம்.

விசுவாசிகள் வியாதியைக் குறித்து பயப்படக்கூடாது. இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும் பயப்படாதிருப்பாய் என்று சங் 91 : 6-லும், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று யாத். 15 : 26-லும், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் என்று 1 பேதுரு 2 : 24-லும் கூறப்பட்ட வார்த்தை நமக்குத்தான் என்பதை பூரணமாய் விசுவாசிக்க வேண்டும்.

சிலர் லேசான வயிற்றுவலி வரும்போதே அல்சர் என்று புலம்புகிறார்கள். வேறு சிலர் சாதாரண இருமலுக்கே காசநோய் வந்துவிடுமோ என்று கலங்குகிறார்கள். ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்தில் உள்ளது என்று வேதம் சொல்லுகிறது. நீங்கள் எப்படி பேசுகிறீர்களோ அப்படித்தான் உங்களுக்கு அமையும்; உங்கள் பலவீனமான அறிக்கையின் மேலே சாத்தான் தன் பலத்தைக் காட்ட ஆரம்பித்து விடுவான்.

உங்கள் வியாதியில் கர்த்தர் என் பரிகாரி என்று விசுவாசியுங்கள். என் நோய்களை எல்லாம் இயேசு சிலுவையிலே சுமந்து தீர்த்தார் என்று அறிக்கையிடுங்கள் சாத்தான் உங்களைத் தொட முடியாது. சாத்தான் உங்களுக்கு வியாதியைத் தரலாம். ஆனால் சர்வ வல்லவராலே விடுதலை பெறலாம். சளைப்படையாமல் கர்த்தரின் சமுகத்தில் காத்திருங்கள்.

**6. மனைவி :**

யோபுவைச் சோதிக்க சாத்தான் பயன்படுத்தின ஆறாவது ஆயுதம் யோபுவின் மனைவியே (யோபு 2 : 9). ஆம், சொந்த மனைவியைக் கொண்டே யோபுவை பிசாசு சோதிக்கிறான். “இன்னும் நீர் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்” யோபுவின் மனைவி நீர் சாவும், இன்னும் உயிரோடிருக்கிறது என்னவென்று கேட்கிறாள்.

என் உள்ளத்தில் ஒரு கேள்வி. யோபுவின் மனைவி நல்லவளாக இருந்தால் இப்படி சொல்லியிருப்பாள்; அது கூட பாசத்தின் நிமித்தமே. “ஐயா பிள்ளைகள் போய்விட்டார்கள். ஆஸ்திகள் போய்விட்டது. இனி நாம் ஏன் இருக்க வேண்டும்? நாம் இருவரும் செத்துப் போகலாம்” இப்படி சொல்லியிருந்தால் எல்லோரும் மெச்சியிருப்பார்கள். யோபுவை சாகச் சொல்லிவிட்டு



இவள் என்ன செய்ய நினைத்தாள் என்று இதுவரைக்கும் புரியவில்லை.

சாபம் இடுவதும் சாகச் சொல்லுவதும் பிசாசின் ஆவி. பிசாசுதான் ஒரு மனிதனை அவன் காலத்திற்கு முன்பே சாகச் சொல்லும்.

லேகியோன் என்னும் மனுஷன் இருந்தான். (6000 பிசாசுகள்) அவனுக்குள் ஒரு பெரிய பிசாசின் பட்டாளமே குடியிருந்தது. அந்தப் பிசாசு என்ன செய்யும் தெரியுமா? கல்லை எடுத்து அவனையே குத்திக் கொண்டு தன்னையே காயப்படுத்திக் கொண்டு சாக அவனை ஏவியது. அந்த ஏவுதலுக்குக் கீழ்ப்பட்டு தன்னைத் தானே குத்திக் காயப்படுத்திக் கொண்டான். (மாற்கு 5 : 1 முதல் 15 வரை).

அந்த சமயத்தில் இயேசு அங்கு வந்தார். அந்த பிசாசை அவனைவிட்டு விரட்டுகிறார். அந்த பிசாசுகளோ அருகில் மேய்ந்து கொண்டிருந்த பன்றிகளுக்குள் போக அனுமதி கேட்கிறது. நல்லோர் மற்றும் பொல்லோர் ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர் அந்த பிசாசுகள் கேட்டுக் கொண்டபடியே பன்றிகளுக்குள்ளே போக அனுமதி கொடுத்தார்.

பன்றிகளுக்குள்ளே இப்பொழுது ஒரு புதிய மாற்றம். மனுஷனுக்குள்ளே இருந்து சாகும்படி ஏவின பிசாசு பன்றிகளையும் சாகும்படி ஏவுகிறது. பாவம், இந்த பன்றிகள் அந்த அசுத்த ஆவிகளுக்கு கீழ்ப்படிந்து கடலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டன. இந்தப் பன்றிகள் புதிதாய்க் கடலைப் பார்க்கவில்லை. ஏற்கனவே பழக்கப்பட்ட இடம்தான். ஆனால் பிசாசின் ஆவி உள்ளே போனதும் அவைகள் தற்கொலைக்கு சென்றுவிட்டன.

உங்கள் புருஷனைப் பார்த்து அல்லது உங்கள் மனைவியைப் பார்த்து செத்துப்போ என்று சொல்லுவீர்களாகில்

நிச்சயம் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு அவன் ஆயுதமாக மாறுவீர்கள் என்பது உண்மை. இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து நீங்கள் ஒப்புரவாகி ஒருவர் கரத்தை ஒருவர் பிடித்துக் கொண்டு கர்த்தருடைய சமுகத்தில் கருத்தாய் ஜெபித்து இப்பேர்ப்பட்ட ஆவிகளைக் கடிந்து கொள்ளுங்கள்.

நம்மை வாழவைக்கும் படியாகத்தான் இயேசு தம்மைத் தாமே சாவுக்கு ஒப்புக் கொடுத்தார். நம்மை பரலோகத்தில் சேர்க்கும்படியாகத்தான் பூலோகத்திற்கு இறங்கி வந்தார். எனவே குறித்த காலத்திற்கு முன்பு மரணத்தைத் தேடுவது தேவனுக்குச் சித்தமில்லை. தேவனுக்குப் பிரியமில்லை.

இன்றைக்கு சில பெண்மணிகள் எதற்கெடுத்தாலும் நான் சாகப்போகிறேனென்று கணவர்களை மிரட்டுவது வாடிக்கை. ஒருமுறை ஒரு சகோதரி தன் புருஷனிடத்தில் நான் கிணற்றில் விழுந்து சாகப்போகிறேன் என்றாள். அந்தக் கணவன் சரி போய்வா என்று வெளியே அனுப்பி கதவை அடைத்துவிட்டார்.

உள்ளே இருக்கும் இவர் காலத்தைக் கணக்குப் போட்டுக் கொண்டு இருந்தார் இப்ப கிணத்துக்கிட்டே போயிருப்பாள், இப்ப கிணத்துல விழுந்திருப்பாள், இப்போ மூழ்கியிருப்பாள், இப்போ உயிர் போயிருக்கும், இப்படி நிமிடவாரியாக கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும்போதே, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. இவர் நடு நடுங்கிப் போனார். செத்தவள் ஆவி வந்துவிட்டதோ என்று பயந்து கதவைத் திறந்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம். அங்கே மனைவி நின்று கொண்டிருந்தாள். ஏம்மா திரும்பி வந்தே என்று கேட்க, மழை பெய்யுது, குடை எடுத்துக் கொண்டுபோக வந்தேனென்று சொன்னபோது புருஷன் சிரித்துவிட்டார்.

நீங்கள் விளையாட்டுக்காகவோ, பயமுறுத்துகிறதற்காக வோ இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்திலிருக்கிறதென்று வேதம் சொல்லுகிறது. ஏனெனில் பேசுகிற வார்த்தையே பிற்காலத்தில் செயலாக மாறும்.



யோபுவின் நண்பர்களைக் குறித்த பெயர்களெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யோபுவின் பிந்தின காலத்தில் பிறந்த பிள்ளைகளின் பெயரெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் யோபு மனைவியின் பெயர் வேதத்தில் எழுதப்படவில்லை. காரணம், தேவன் யோபுவின் மனைவியை அங்கீகரிக்கவில்லை என்று தெரிகிறது.

அன்பான சகோதரிகளே, பக்திமான்களுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டதால் எல்லாம் அடைந்து விட்டோமென்று இறுமாந்து போகாதீர்கள். உங்களை தேவ சமூகத்தில் தாழ்த்தி தேவன் உங்களை பேர் சொல்லும் இடத்தில் உங்களை நிறுத்திக் கொள்ளுங்கள். சோதனைகள் பல வந்தாலும் அவைகளை ஜெயிக்க பெலன் தேவனிடத்திலுண்டு. சோர்ந்திடாமல் ஜெபம் செய்யுங்கள். சோதனைகள் உங்களுக்கு முன்பாய் தூள் தூளாய் மாறும்.

# 6

# நண்பர்களும் – யோபுவின் பின்னிலைமையும் !

இந்த முழு ஆகமத்திலும் பெரும் பகுதி யோபுவுக்கும் அவன் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சம்பாஷனைகளின் வாக்கியங்களால் அமைந்திருக்கிறது. யோபுவின் நண்பர்களைக் குறித்து யோபு 2 : 11ல் வாசிக்கிறோம். தேமானியனாகிய எலிப்பாஸீம், சூகியனாகிய பில்தாதும் நாகமாத்தியனாகிய சோப்பாரும் மூன்று முக்கிய நண்பர்கள். யோபு 32 : 2 இல் பூசியனாகிய பரகெயேலின் குமாரன் எலிகூ நான்காவது நண்பர், முந்தின மூவர் முதியவர்கள், பிந்தின எலிகூ இளையவர் (யோபு 32 : 6).

முந்தின மூவர் யோபுவைக் காண வந்ததற்கு இரண்டு காரணம். முதலாவது யோபுவுக்காக பரிதபிக்க, இரண்டாவது யோபுவுக்கு ஆறுதல் சொல்ல (யோபு 2 : 11). இவர்கள் வந்த நோக்கத்தின் முதல் பகுதியை முழுமையாய் நிறைவேற்றினார் கள். இரண்டாம் பகுதியையோ இரண்டகம் செய்து விட்டார்கள்.

யோபுவைக் கண்ட இவர்கள் அழுதார்கள். வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டார்கள். தலைமேல் புழுதியை போட்டுக் கொண்டார்கள். இரவு பகல் ஏழு நாள் புசியாமலும், பேசாமலும் மவுனமாயிருந்தார்கள். பிறகு பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆறுதல் சொல்லவில்லை. ஏழு நாள் பேசாமல் இருந்ததற்கு சேர்த்துப் பேசி யோபுவை உருக்குலையச் செய்து விட்டார்கள்.

இன்றைக்கும் இப்படித்தான். வியாதியஸ்தர்களைப்



பார்க்க போகிறார்கள். எப்படி சந்திக்க வேண்டும், பேச வேண்டும் என்று உணர்வில்லாமல் இருக்கிறார்கள். வியாதியஸ்தர்களைப் பார்க்கும் பொழுது அவர்களுக்காக பரிதபிக்க வேண்டும். இரண்டாவது அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும். நம்முடைய ஆறுதலான வார்த்தைகளே வியாதியஸ்தரை விடுதலையாக்கும்.

சிலர் சொந்த அனுபவங்களை, எதிரிடையான காரியங்களை படுக்கையில் இருப்பவர்களுக்கு சொல்வதால் அவர்கள் சுகம் பெறாமல் பெலவீனப்பட்டுப் போகிறார்கள். யோபுவின் நண்பர்கள் இப்படித்தான் வார்த்தைகளாலேயே வதைத்து விட்டார்கள்.

**முதலாம் நண்பன் எலிப்பாஸ் (யோபு 2 : 11)**

இவனைக் குறித்து தேமானியனாகிய எலிப்பாஸ் என்று கூறப்பட்டுள்ளது. இந்த தேமான் என்ற வார்த்தையை குறித்து வேத புஸ்தகத்தில் இரண்டு இடங்களில் குறிப்பு வருகிறது. ஆதியாகமம் 36 – 4, 11 வசனங்களில் ஏசாவின் வழிவந்தவன் எலிப்பாஸ் என்றும், 41ம் வசனத்தில் ஏசாவின் வம்சத்தில் தோன்றிய பிரபு தேமான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. எரேமியா 49 : 7 – இல் தேமானிலே இனி ஞானமில்லையோ? என்று எழுதியிருக்கிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் எலிப்பாஸ் ஏசாவின் வம்சத்தானாகிய தேமான் பிரபுவின் வழி வந்தவனென்றும், லௌகீக ஞானம் பெற்ற கூட்டத்தைச் சேர்ந்தவன் என்றும் விளங்குகிறது.

இவன் பேசிய வார்த்தைகள் யோபு 5 : 5, 15, 22 ஆகிய அதிகாரங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இவன் பேச்சு முழுவதும் மனித அறிவுப் பூர்வமாகவே இருந்தது. வியாதியஸ்தர்களை சந்திப்பவர்கள் தங்கள் அறிவு வளர்ச்சியை காண்பிக்கக் கூடாது. உடல் வலியா அனால்ஜின் சாப்பிடுங்கள் வயிற்று வலியா

பெரால்கான் சாப்பிடுங்கள் என்று மருத்துவக் குறிப்புகளை சொல்லக்கூடாது. இதையெல்லாம் சொல்லித் தருவதற்கு வைத்தியர்கள் இருக்கிறார்கள்.

வியாதியஸ்தரை வீட்டிலோ மருத்துவ மனையிலோ எங்கு சந்தித்தாலும் யாக்கோபு 5 : 15-ன் படி விசுவாசத்தோடும் 5 : 14-ன் படி எண்ணை பூசியும் ஜெபியுங்கள். கர்த்தர் குணமாக்குவார்.

**இரண்டாவது நண்பன் பில்தாது : - (2 : 11)**

சூகியானாகிய பில்தாது என்று இவனைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆதி 25 : 2-இல் கூறப்பட்டுள்ள ஆபிரகாமின் மூன்றாவது மனைவியாகிய கேத்தூராளுக்கு பிறந்த சூவாகின் வம்சத்தில் வந்தவரே சூகியர் என்று கருதப்படுகிறது. இவர்கள் ஆபிரகாம் உயிரோடு இருக்கும் பொழுதே பாலஸ்தீனத்திற்குக் கிழக்கே குடியேறினார்கள் என்றும் ஆதி 25 : 6-ல் வாசிக்கிறோம்.

இந்த பில்தாது பேசின வார்த்தைகள் யோபு 8, 18, 25 ஆகிய மூன்று அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இவன் மனித பாரம்பரியங்களை மேற்கோள் காட்டிப் பேசினான். ஒரு சிலர் இப்படித்தான் வியாதியஸ்தர்களை சந்திக்கும் போது குற்றவாளியைக் கூண்டில் ஏற்றி கேள்வி கேட்பது போல் நீதி விளம்பப் பேசி நிலைகுலையச் செய்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுக்காக வழக்காட வந்துள்ள வழக்குரைஞர்போல் வாய் நோகப் பேசி வியாதியஸ்தர்களை சீக்கிரமே கல்லறைக்கு அனுப்பி விடுகின்றனர். ஒரு சில ஊழியர்களுங்கூட "பிரதர், நீங்க தசமபாகம் தரவில்லை. சிஸ்டர், நீங்கள் ஊழியக்காரருக்கு விரோதமாய் பேசிட்டீங்க. அதனால் தான் வியாதி" என்று படுக்கையிலிருக்கிற ஆளுக்கு பயங்காட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

நாம் வியாதியஸ்தர்களை சந்திக்கும் போது அப்படி



செய்யக்கூடாது. ஒருவேளை அவர்கள் குற்றம் செய்திருந்தாலும் குற்றத்தை சுட்டிக்காட்ட வேண்டிய இடம் அதுவல்ல வேதம் சொல்வதைப் பாருங்கள். (யோபு 5 : 16) நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். ஆம். வியாதியஸ்தரல்ல. ஜெபிக்கச் சென்றவர்களே முதலாவது குற்றங்களை அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும். அப்பொழுது வியாதியஸ்தர் தன்னைப் போல ஜெபிப்பார். அங்கே தெய்வீக சுகம் வெளிப்படும்.

**மூன்றாம் நண்பர் சோப்பார் : - (21 : 1)**

இவனைக் குறித்து நாகமத்தியனாகிய சோப்பார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இவன் யூதாவுக்கு தெற்கு முகமாய் உள்ள நாகமா என்ற ஊரைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. இவன் பேசின வார்த்தைகள் அதிகாரம் 11 மற்றும் 20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் சுயநீதிக்காரனும், சுய பிரஸ்தாபத்தைப் பேசுகிறவனுமாயிருந்தான். இப்படித்தான் சில பேர் வியாதியஸ்தர்களைப் பார்க்கும் போது சம்பந்தமில்லாத வார்த்தைகளைப் பேசுவார்கள்.

இப்படி மூத்த மூன்று சிநேகிதர்களும் மூர்க்கத்தனமான வாதங்களை வைத்துக் கொண்டிருக்கும் போது இவர்களுக்கும் யோபுவுக்கும் புத்தி சொல்ல நான்காவது நண்பன் எலிகூ எழும்புகிறான். எலிகூ என்பதற்கு மத்தியஸ்தன் என்று பொருள்.

**நான்காவது நண்பன் எலிகூ : -**

இவனுடைய பேச்சு யோபு 32-ஆம் அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. இவனைக் குறித்து பூசியனாகிய எலிகூ என்று எழுதப்பட்டிருக்கிறது. பூஸ் வம்சம் என்றால் என்ன? இதைக் குறித்து ஆதி 22 : 20, 21-இல் விடை கிடைக்கிறது. ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் இரண்டாம் குமாரன் பூஸ் என்பவன்

இவன் வழியில் வந்தவர்கள் பூசியர்கள். இவன் எப்பொழுது யோபுவைப் பார்க்க வந்தானென்று நமக்குத் தெரியாவிட்டாலும், முந்தைய மூன்று நண்பர்களின் சம்பாஷணைகளை முழுமையாகக் கேட்டான் என்று தெரிகிறது. ஆகிலும் (யோபு 32 : 4, 7) முதியவர்கள் பேசட்டும் என்று மவுனமாய் இருந்தான்.

சபையில் வாலிபர்கள் எலிகூவைப் போல இருக்க வேண்டும். எலிகூ முதியவர்கள் பேசித்தீருமட்டும் காத்திருந்தது போல் வாலிபர்கள் சபையிலேயும், வீட்டிலேயும் முதியோர் பேசித்தீருமட்டும் அமைதலாயிருக்க வேண்டும் ஆனால் இப்பொழுதெல்லாம் வாலிபர்களுக்கு அசாத்திய வேகம் வந்து விட்டது. வேகம் வேண்டும். ஆனால் வேகத்தில் விவேகம் இருக்க வேண்டும். முதியோரிடத்தில் ஞானம் தங்கும் என்று வேதம் சொல்லுகிறது. Old for counsel, youth for action என்று ஒரு ஆங்கிலப் பழமொழி இருக்கிறது. எனவே பெரியவர்கள் பேச வேண்டும். இளைஞர்கள் அதை செயல்படுத்த வேண்டும்.

எங்கள் போதகர் பேச்சைக் கேட்பதில்லையென்று முறுமுறுப்பதை பல இடங்களில் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படி ஊழியர்களால் நிறைவேற்ற இயலாது (1 இராஜாக்கள் 12 : 6 முதல் 15) சாலொமோனின் குமாரனாகிய ரெகோபெயாம் முதியோரிடம் பெற்ற ஆலோசனையை நிறைவேற்றாமல், வாலிபரோடே செய்த ஆலோசனையை நிறைவேற்ற முற்பட்டதினால்தான் அவன் ராஜ்யபாரம் சிதைந்து போயிற்று.

எனவே வாலிபர்கள் முதியோருக்கு முதலிடம் கொடுத்து காத்திருங்கள். கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

எலிகூ மௌனம் கலைந்து பேசியதற்கு இரண்டு காரியங்கள் உண்டு. ஒன்று யோபு தன்னை மிகவும் உயர்த்தினது மற்றொன்று மூன்று மூத்தவர்களுக்கு மறுமொழி சொல்ல



வார்த்தையில்லாமல் போனது. பக்தி வைராக்கியத்தினால் வாயைத் திறக்கலாம் அல்லது அவசியம் ஏற்படுமாயின் வாயைத் திறக்கலாம். இல்லாவிட்டால் மவுனமாயிருப்பதே உச்சிதம். இந்நிலையில் தான் எலிகூ யோபுவுக்கு உபதேசிக்கிறான். இதனால் யோபு உணர்வடைகிறான்.

எலிகூவின் பேச்சு தேவனுக்குப் பிரியமாய் இருந்ததென்றே தெரிகிறது. காரணம் யோபு 42 : 7 ல் கர்த்தர் எலிப்பாஸை நோக்கி உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது என்றார். எலிகூவைக் குறித்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. நிதானமாய்ப் பேசுகிறவன் தேவனுக்குப் பிரியமாய் பேசுகிறான். நீங்கள் நிதானமாய்ப் பேச கற்றுக் கொள்ளுங்கள்.

**யோபுவின் மனந்திரும்புதல் : –**

யோபுவின் புத்தகம் 38–ஆம் அதிகாரம் முதல் 41–ஆம் அதிகாரம் முடிய 129 வசனங்களில் கர்த்தர் யோபுவோடு பேசுகிறார். மனிதப் பேச்சுக்களால் எரிச்சலடைந்து திகைத்துப் போயிருந்த யோபு கர்த்தரின் பேச்சால் கலங்கிப் போனார். மனிதர் முன்பு உத்தமத்தைக் குறித்து வீர வசனம் பேசினவர் கர்த்தருக்கு முன்பு கைக்கட்டி நிற்கிறார்.

யோபு 42 : 3–இல் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன் என்றும், 6–ஆம் வசனத்தில் நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படு கிறேன் என்றும் யோபு புலம்புகிறார்.

உத்தமனாகிய யோபு ஏன் மனஸ்தாபப்பட்டார்? எதற்காக மனஸ்தாபப்பட்டார்? வேறொன்றுமில்லை. நண்பர்களோடு பேசிய வீணான வார்த்தைகளே. ஆம், பேச்சின் மிகுதியால் பாவமில்லாமற்போகாது. ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். கர்த்தருடைய பிள்ளைகள்

பேசுகிற வார்த்தைகளைக் குறித்து மிகவும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் பேசும் வீணான வார்த்தைகளைக் குறித்து கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

உத்தமனாகிய யோபு சத்தமிட்டுப் பேசியதால் சத்துவத்தை இழந்து சாம்பலிலே உட்கார்ந்து மனந்திரும்ப வேண்டியதாயிற்று. வெளியே இருந்து உள்ளே போவதல்ல. உள்ளேயிருந்து வாய்க்கு வெளியே வருவதுதான் மனிதனை தீட்டுப்படுத்தும். அதனால் தான் தாவீது ராஜா கூட, கர்த்தாவே என் உதடுகளுக்குக் காவல் வையும் என்று ஜெபிக்கிறார். நம் ஒவ்வொருவருடைய ஜெபமும் இப்படியே இருக்க வேண்டும்.

உதடு பரிசுத்தமாக இல்லாவிட்டால் உடல் முழுவதும் அசுத்தமாயிருக்கும். உள்ளமும் அப்படியே இருக்கும். ஏசாயா தேவதரிசனத்தைக் கண்ட போது நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என்று கதறுகிறார். (ஏசாயா 6 : 5 முதல் 7). அப்பொழுது தேவதூதன் நெருப்புத் துண்டை எடுத்து ஏசாவின் உதட்டைத் தொட்டு இப்பொழுது உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவர்த்தியானது என்றார். ஆம், உதடுகளின் பரிசுத்தமே உள்ளான மனுஷனின் பரிசுத்தம். பேச்சைக் குறைப்பீர், ஜெபத்தை அதிகரிப்பீர்.

ஒரு சிலருக்கு எதைத்தான் பேசுவது என்ற விபரமே கிடையாது. அவசியமானதைப் பேசுங்கள். அதுவும் அவசியமானால் பேசுங்கள்.

சிறப்பாக பெண்களுக்கு பேச்சைக் குறைக்கும் கிருபை அவசியம் தேவை. ஏதேனில் ஏவாள் பேச்சைத் தவிர்த்திருந்தால் பேராபத்தைத் தவிர்த்திருக்கலாம். எனக்குத் தெரிந்த ஒரு பிரசங்கியார் சொன்ன சம்பவம் எனது நினைவுக்கு வருகிறது.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு சீஷர்களிடத்தில் தன் உயிர்த்தெழுதலைக் குறித்து சொல்லாமல், ஏன் ஒரு பெண்ணுக்கு முதலில் தரிசனமானார் என்றால் அதற்கு ஒரு விசேஷித்த நோக்கமுண்டு. ஆண்களிடத்தில் செய்தி சொன்னால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாமென்று அசதியாய் படுத்துவிடுவார்கள். ஆனால் பெண்களுக்கு ஒரு செய்தி தெரிந்தால் அர்த்த ராத்திரியாயிருந்தாலும், அடை மழையே பெய்தாலும், குடையே இல்லாவிட்டாலும், முறத்தை தலைமேல் வைத்துக் கொண்டு பக்கத்து வீட்டில் போய் சொன்னால் தான் மனதே நிம்மதி அடையும் ! (அப்படின்னு அந்தப் பிரசங்கியார் சொல்லுவார்). அதனால் தான் இயேசு பெண்ணிடத்தில் சொன்னார்.



ஆகவே சகோதரிகளே, சகோதரர்களே, வாயின் வார்த்தைகளைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள்.

**யோபுவின் விடுதலை : –**

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் பண்ணினான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் என்று யோபு 42 : 10–இல் வாசிக்கிறோம். இது எல்லாரும் அடிக்கடி சொல்லுகிற வார்த்தை. ஆனால் இந்த நண்பர்கள் என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு வரலாறே இருக்கிறது.

உண்மையில் அவர்கள் நண்பர்களல்ல. யோபுவைக் குற்றம்சாட்டினவர்கள். யோபுவை நிந்தித்தவர்கள் (யோபு 12 : 4). யோபுவுக்கு விரோதமாய் வாயைத் திறந்தவர்கள் (யோபு 16 : 10). யோபுவின் ஆத்துமாவை வார்த்தையினால் நொறுக்கினவர்கள் (யோபு 19 : 3) சுருங்கக் கூறுவோமானால் சத்துருக்களாய் மாறிப்போன முன்னாள் சிநேகிதர்கள்.

இவர்களுக்காகத்தான் யோபு ஜெபித்தார் ! நாம் நம் ஜெபநிலைமையை மாற்றிக் கொள்ள வேண்டும். யோபுவுக்கு அவர்கள் முன்பும் சிநேகிதர்கள் பின்பும் சிநேகிதர்கள் முன்பு

மனுஷீக அன்பினால் சிநேகித்தான். பின்னரோ சத்துருக்களை சிநேகியுங்கள் என்ற வேத வார்த்தையின்படி சிநேகித்தான். உங்கள் ஊழியத்தையும் உங்கள் குடும்பத்தையும் வெறுக்கிற உங்கள் சத்துருக்களை முதலில் சிநேகியுங்கள். அடுத்து அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். அப்பொழுது இரட்டத்தனையாய் ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

**இரட்டத்தனை ஆசீர்வாதம் :**

யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார் என்று யோபு 42 : 10, 12 வசனங்களில் வாசிக்கிறோம். மிருக ஜீவன்கள் எல்லாவற்றிலும் சரியாக இருமடங்குகளை தேவன் கொடுத்தார். ஆனால் பின்னர் அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்களென்று எழுதப்பட்டிருக்கிறது.

இரட்டத்தனை கணக்குப்படி பதினான்கு ஆண்மக்களும், ஆறு பெண் மக்களும் பிறக்க வேண்டுமே? ஏன் இப்படிக் குறைவானது என்று உங்களுக்குக் கேள்வி எழலாம். மிருகஜீவன்களெல்லாம் இந்த உலகத்தோடு அழிவதனால் தான் இரட்டிப்பாய்க் கொடுத்தார். ஆனால் அவன் பிள்ளைகளின் ஆத்துமாக்கள் நித்தியமானதால் முன்னிலைமையில் பெற்ற பத்துப் பிள்ளைகளும், நித்தியத்துக்குள் பத்திரமாய் இருக்கிறார்கள். எனவே யோபு 19 : 27-ன்படி கர்த்தருடைய நாளில் யோபுவின் குமாரராக பதினான்கு மகன்களும், ஆறுமகள்களும் ஜீவனோடு எழுந்திருப்பார்கள்.

**ஒரு மனைவி :**

யோபுவுக்கு உண்டான எல்லாவற்றையும் தேவன் எடுத்து விட்டார்; ஆனால் மனைவியை மாத்திரம் எடுக்கவில்லை. ஏன் என்று எனக்குத் தெரியாது. இவள் உபத்திரவமே போதும். இனி வேறொருத்தியைக் கொடுத்தால் யோபு தாங்கமாட்டான் என்று



நினைத்தாரோ, என்னவோ? யோபுவின் மனைவியை விட்டுவிட்டார். யோபுவின் மனைவி எப்பொழுது மரித்தாள் என்று தெரியாவிட்டாலும் பின்னர் பத்து பிள்ளைகள் பெற்றெடுக்கும் பெலத்தோடு உயிரோடு இருந்தாள் எனத் தெரிகிறது.

**யோபுவின் ஆயுசு நாட்கள் :**

பின்னும் நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து மரித்தான் என 42 : 16-இல் வாசிக்கிறோம். இதை அடிப்படையாகக் கொண்டு யோபினுடைய தோராயமான வயதைக் கண்டுபிடிக்கலாம். இரட்டத்தனை ஆசீர்வாத வாழ்வின் ஆயுசு நாட்கள் நூற்று நாற்பது. அப்படியானால் முற்பகுதி ஒரு பங்கு எழுபது வருடங்கள் ஆகிறது. ஒரு பகுதி எழுபது வருடமும், இரட்டத்தனை பகுதி நூற்றி நாற்பது வருடமும் சேர்ந்தால் வருகிற இருநூற்றுப் பத்து வருடமே யோபின் ஆயுசு நாட்கள் என்றும் சுமார் எழுபதாவது வருடத்திலே அவர் வியாதிப்பட்டாரென்றும் யூகித்துக் கொள்ள முடிகிறதல்லவா?

**கர்த்தரின் ஐசுவரியம் :**

எல்லாம் இழந்த யோபு எப்படி திடீர் என்று ஐசுவரியவான் ஆனான் என்ற கேள்வி உங்களுக்கு எழுகிறது அல்லவா? இதற்கு ஏழு பதிலை யோபு 42 : 11-இல் வாசிக்கிறோம். யோபுவுக்கு அறிமுகமானவர்கள் அவனிடத்தில் வந்து ஆறுதல் சொல்லி அவரவர் ஒவ்வொரு தங்கக் காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளே, 42 : 10-இல் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் என்று வாசிக்கிறோம். அடுத்த வசனத்தில் மனிதர்கள் கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆம், கர்த்தர் அனுமதிக்காவிட்டால் ஒருவரும் ஒன்றும் நமக்கு அருளமாட்டார்கள். கர்த்தர் ஆசீர்வதித்தாலே நம்மை அறியாதவர்களும் காணிக்கைகளைக் கொண்டு வந்து காலின்

கீழ் கொட்டுவார்கள்.

இவருக்கு இவ்வளவு சம்பளம் வருகிறதே, இவருக்கு இவ்வளவு காணிக்கை வருகிறதே என்று திகைக்காதீர்கள். பரத்திலிருந்து அருளப்படாவிட்டால் அவர்களுக்கு அப்படி கிடைக்காது. அவரிடத்தில் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. உங்களுக்கும் அப்படியே செய்வார்.

**என் தாசனாகிய யோபு :**

யோபு முதல் அதிகாரம் 8-ஆம் வசனத்திலேயும், முடிவான அதிகாரம் 8-ஆம் வசனத்திலேயும், என் தாசனாகிய யோபு என்று புகழாரம் சூட்டி அழைக்கிறார். ஆம், முதலில் இருந்தபடியே முடிவு வரை யோபு தன் ஆவிக்குரிய வாழ்வை உத்தமமாய் காத்துக் கொண்டார். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

பிரியமானவர்களே, எனக்கும் என் சபைக்கும் கர்த்தர் கொடுத்த சத்தியங்களையே உங்களுக்கு முன்பாய் வைத்திருக்கிறேன். உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தேவையான சத்தியம் இது என்று உணருகிறேன். வாசித்து வாழ்க்கையை மாற்றுங்கள். யோபுவைப் போல் வாழ்வாங்கு வாழுங்கள். கர்த்தருக்கே மகிமை! ஆமென்!

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**